பக்கங்கள்-16 | 04.புரட்டாதி.2022 | விலை–40.00





# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –384

# டயஸ்போராக்களை குறிவைத்து இலங்கையின் புலனாய்வுப் பிரிவு – நிராஜ் டேவிட்




# 2000நாட்களை கடந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம்




# பிரபாகரன் ஏன் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்?



# TELO,EPRLF போன்ற இயக்கங்களை புலிகள் தடை செய்தது ஏன்?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# டயஸ்போராக்களை குறிவைத்து இலங்கையின் புலனாய்வுப் பிரிவு – நிராஜ் டேவிட்




ஒப்பரேஷன் ட்ரஸ்ட்' என்ற இந்த இராணுவ நடவடிக்கை பற்றி உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உலக இராணுவ விவகாரங்கள் பற்றிய அறிவு உங்களுக்கு போதாது என்றுதான் கூறவேண்டும். ஒரு நாட்டின் உளவுப் பிரிவு சர்வதேச மட்டத்தில் மேற்கொண்ட மிக முக்கியமானதும், மிகவும் பிரபல்யமானதுமான ஒரு நடவடிக்கைதான் இந்த 'Operation Trust' என்ற இராணுவ நடவடிக்கை. ஒரு தேசத்தின் ஆட்சிக்கு எதிராகப் புலம்பெயர்ந்த அந்த தேசத்து மக்கள் சர்வதேச மட்டத்தில் மேற்கொண்ட ஒரு புரட்சியை மிகவும் வெற்றிகரமாக அடக்கி ஒடுக்கிய ஒரு இராணுவ நடவடிக்கைதான் 'Operation Trust'. இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது உலக மட்டத்தில் ஒரு காலத்தில் மிகவும் பிரபல்யமான ஒரு உளவு அமைப்பாக வலம் வந்த கே.ஜீ.பி (KGB) அமைப்பு. சோவித் ஒன்றியத்தின் ஆணிவேர், சோவியத் ஒன்றியத்தின் கண்கள், சோவியத்தின் மூளை என்கின்ற தான பல அடையாளங்களுடன் மிகவும் வெற்றிகரமாக வலம்வந்த உளவு அமைப்பு கே.ஜீ.பி. உளவு அமைப்பு.

புலம்பெயர்ந்த ஒரு தொகுதி ரஷ்ய பிரஜைகளால் சோவியத்தின் கமியூனிச ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ள ஒரு மிகப் பெரிய புரட்சியை முற்றாகவே கிள்ளி எறிவதற்காக கே.ஜீ.பி. உளவு அமைப்பு மேற்கொண்ட ஒரு இரகசிய உளவு நடவடிக்கைதான் 'Operation Trust'. (அந்த நேரத்தில் சோவியத் ஒன்றியத்தின் உளவு அமைப்பு OGPU என்ற பெயரில் தான் செயற்பட்டு வந்தது. பின்நாட்களில் தான் கே.ஜீ.பி. என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனாலும் பின்னாட்களில் பிரபல்யமான கே.ஜீ.பி. என்ற பெயரையே பரிட்சயம் காரணமாக இந்தக் கட்டுரையில் பாவிக்கின்றேன்) ரஷ்யப் புரட்சி முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் ரஷ்யாவில் மன்னராட்சியை உருவாக்கும் நோக்கோடு ஒரு புரட்சிகர அமைப்பு உருவானது. அதன் பெயர் Monarchist Union of Central Russia (MUCR). 1921ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த இயக்கம், ரஷ்யாவில் எப்படியும் மீண்டும் மன்னராட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு போராடி வந்தது.

சோவியத் ஒன்றியம் முழுவதிலும் அப்போதைய போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போராடி வந்த பல்வேறு இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு மிகவும் மும்முரமான போராட்டத்தை மேற்கொண்டு வந்தது இந்த MUCR அமைப்பு. இந்த நேரத்தில்தான் கே.ஜீ.பி. ஒரு இரகசிய ஒப்பரேஷனை மேற்கொண்டது. மிகவும் கவனமாகத் திட்டமிட்டு, நிதானமாக, மிகவும் இரகசியமாக காய்களை நகர்த்தியது.கே.ஜீ.பி. இனது நோக்கமும், திட்டமும் வெறும் MUCR இயக்கத்தை முடக்குவது மாத்திரமல்ல. அதனையும் தாண்டி நீண்ட, விரிந்த திட்டத்தைத் தீட்டியது கே.ஜீ.பி. சோவியத் ஒன்றியத்திற்கு எதிராக போர்க்கொடி துக்கியிருந்த அனைத்து இயக்கங்களையும் கூண்டோடு அழித்துவிடத் திட்டம் தீட்டியது. அது மாத்திரமல்ல. சோவியத்தில் இருந்து வெளியேறி மேற்குலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்துஅங்கிருந்தபடிபோராடிவரும் அமைப்புகளுக்கும் சேர்த்து வலை விரித்தது கே.ஜீ.பி.. நுணுக்கமானதும், மிகவும் கஷ்டமானதுமான ஒரு உளவுச் சதி. ஆனாலும் அதனை வெற்றிகரமாக மேற்கொண்டு பிரபல்யமான ஒரு உலகசாதனை படைத்தது கே.ஜீ.பி.

இந்த இரகசிய உளவு நடவடிக்கைக்கு கே.ஜீ.பி. சூட்டிய பெயர் 'Operation Trust'. முதலில் அந்த புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவர்களை சுதந்திரமாகச் செயற்படவிட்டார்கள். அழைத்துப் பேசினார்கள். பகிரங்கமாக ஆர்ப்பாட்டம் செய்ய, கூட்டம் கூட, கருத்துக்கூறவெல்லாம் அனுமதித்தார்கள். திடீரென்று ஒருநாள் ஒட்டுமொத்தமாக அனைத்து செயற்பாட்டாளர்களையும், தலைமையையும் கைது செய்தார்கள்.

ஆனால் இந்த கைது விவகாரம் வெளியே யாருக்குமே தெரியாது. காதும் காதும் வைத்தாற்போன்று அனைவரையும் பிடித்து உள்ளேபோட்டுவிட்டு, கே.ஜீ.பி.ஏஜண்டுக்கள் MUCR இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போன்று செயற்பட ஆரம்பித்தார்கள். கைதுசெய்யப்பட்ட MUCR இயக்கத் தலைமைகளையும் மிட்டி, சித்திரவதை செய்து பணிய வைத்து தங்களது கைப்பாவைகளாக செயற்பட வைத்தார்கள். (மனைவி, பிள்ளைகளை இரகசியச் சிறைகளில் பணயம் வைத்துக்கொண்டு, தாம் சொல்கின்றபடி நடந்தாக வேண்டும் என்று மிரட்டினால் பாவம் அந்த இயக்க உறுப்பினர்களால் வேறு என்னதான் செய்யமுடியும்?)

MUCR இயக்கத்தினரைப் போன்று வேடமணிந்து செயற்பட்ட ஆரம்பித்த கே.ஜீ.பி. உறுப்பினர்கள், முன்னர் இருந்த MUCR இயக்கத்தை விட இன்னும் வேகமாக புரட்சி பேசினார்கள். செயற்பட்டார்கள். வெற்றிகரமாகச் சில தாக்குதல்களைக்கூட மேற்கொண்டார்கள். அத்தோடு, சோவியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியபடி ரஷ்யாவிலும், வேறு பல நாடுகளிலும் செயற்பட்டு வந்த மற்றைய அமைப்புக்களுக்கு நிதி உதவிகளும், வேறு பல உதவிகளும் செய்யத் தலைப்பட்டார்கள்.

இது, MUCR இயக்கம் என்ற பெயரில் செயற்பட்ட கே.ஜீ.பி. உளவு அமைப்பிற்கு சோவியத் ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்ட அனைத்து தரப்பினர் பற்றிய முழு விபரங்களையும் திரட்டுவதற்கு பெரிதும் உதவியாக இருந்தது. விபரங்களைத் திரட்டினார்கள். முக்கியமானவர்களை கைதுசெய்தார்கள். கைதுசெய்ய முடியாதவர்களை படுகொலை செய்தார்கள். பல்வேறு இயக்கங்கள் மத்தியிலும், இயக்கங்களுக்கு உள்ளேயும் கூட பிளவுகளை ஏற்படுத்தினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் சோவியத் ஒன்றியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போராடி வந்த அனைத்து இயக்கங்களையும் முடக்கிவிடுவதில் கே.ஜீ.பி. உளவு அமைப்பு வெற்றி பெற்றிருந்தது. ஆனால் இந்த ஒப்பரேஷனைப் பொறுத்த வரையில் கே.ஜீ.பி. உளவு அமைப்பிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்பது, அவர்கள் சோவியத்தில் மாத்திரமல்லாமல் மேற்குலக நாடுகளில் செயற்பட்டு வந்த பல்வேறு இயக்கங்களையும், செயற்பாட்டாளர்களையும் ஒடுக்குவதின் ஊடாகத்தான் கிடைத்தது. ஆம். சோவியத் ஒன்றியத்தில் மாத்திரமல்ல ரஷ்யர்கள் புலம்பெயர்ந்து செயற்பட்ட மேற்குல நாடுகளிலும் கூட, கே.ஜீ. பியின் இந்த 'Operation Trust' என்ற இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. ரஷ்யாவில் இருந்து பிரித்தானியாவிற்கு வந்து தஞ்சம் அடைந்த சில கே.ஜீ. பி. ஏஜண்டுக்கள், தம்மை MUCR இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று வெளிக்காண்பித்து நடித்துக்கொண்டு சோவியத் அரசிற்கு எதிராக புரட்சி பேசினார்கள். தம்மை தீவிரவாதிகளாக வெளிக்காண்பித்துக்கொண்டு சோவியத் ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வதாக 'பவ்லா' காண்பித்தார்கள். புலம்பெயர் நாடுகளில் சோவியத் ஒன்றியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டுக்கொண்டிருந்த பல்வேறு சக்திகளையும் ஒன்றுதிரட்டி சோவியத் ஒன்றியத்தின் ஆட்சியைத் தாம் வீழ்த்தப் போவதாக அறைகூவல் விடுத்தார்கள்.

சோவியத்தில் இருந்து புலம்பெயர்ந்து பலநாடுகளிலும் சோவியத் ஆட்சிக்கு எதிராகக் கொதித்துக்கொண்டிருந்த பல இளைஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பெரும் பணக்காரர்கள், ஊடகவியலாளர்கள் இந்த MUCR இயக்கத்தின் வெளிநாட்டுப் பிரிவுடன் சேர்ந்து செயற்பட முன்வந்தார்கள். பலவிதமான உதவிகள் ஒத்தாசைகளை வழங்கினார்கள். பணத்தை அள்ளி இறைத்தார்கள். MUCR என்ற அந்தப் புரட்சிகர அமைப்பைப் பயன்படுத்தி எப்படி சோவியத் ஆட்சியைக் கலைக்கலாம் என்று திட்டம் தீட்டினார்கள். ஆனால் MUCR இயக்கம் என்ற பெயரில் செயற்பட்ட சோவியத்தின் உளவுப் பிரிவினரோ மிகவும் கவனமாகச் செயற்பட்டு ஒரு பெரிய உளவுச் சதியை அரங்கேற்ற ஆரம்பித்தார்கள்.

அந்த உளவுச் சதி, உலகின் போரியல் வரலாற்றில் மிகவும் உறுதியாகப் பதியப்படும் அளவிற்கு ஒரு மிகப் பெரிய வெற்றியை சோவியத்தின் உளவுப் பிரிவான கே.ஜீ.பிக்குப் பெற்றுக்கொடுத்தது. இப்பொழுது ஒரு வரலாற்றுச் சம்பவத்தைப் பார்ப்போம். எங்கள் அனைவருக்கும் ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற சினிமா கதாபாத்திரத்தை நன்றாகத் தெரியும். இந்த ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம் ஒரு பிரித்தானிய இரகசிய உளவாளி. மிகப் பெரிய வீர சாகசங்களை தனி ஒருவனாகச் செய்வதில் வல்லவனாக இந்தக் கதாபாத்திரம் அமைக்கப்பட்டிருந்தது. ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற வீர கதாபாத்திரத்தை உருவாக்கிய எழுத்தாளரின் பெயர் இயான் பிளேமிங் (Ian Fleming). தனது இந்த ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம் பற்றி இவர் பின்நாட்களில் கருத்துத் தெரிவிக்கும் பொழுது, 'சிட்னி ரெய்லி (Sidnely Reily) என்ற ஒரு பிரித்தானிய உளவாளியின் உண்மையான வீர சாகசம்தான் என்னை ஜேம்ஸ் பொண்ட் 007 கதாபாத்திரத்தை உருவாக்க வைத்தது. இந்த பிரித்தான உளவாளியையும், அவனது சாகசங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் நான் ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தை உருவாக்கினேன்' என்று தெரிவித்திருந்தார்.

அந்த அளவிற்கு பிரபல்யமான இந்த சிட்னி ரெய்லி என்ற பிரித்தானிய உளவாளி உண்மையிலேயே ஒரு ரஷ்யர். ரஷ்யாவில் பிறந்த இவர் ஏதோ காரணத்திற்காக ரஷ்ய ஆட்சியை வெறுக்கத் தொடங்கினார். சிறு வயதிலேயே தனது குடும்பத்தினருடன் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் தஞ்சம் அடைந்திருந்தார். பிரித்தானியாவின் இரகசியப் பொலிஸ் பிரிவில் இணைந்து இவர் செய்த சாகசங்கள் கொஞ்சநஞ்சமல்ல. உளவாளியாக ரஷ்யாவிற்குச் சென்று அங்கிருந்து பலவிதமாக இரகசியங்களைத் திருடி பிரித்தானியாவிற்கு கொண்டுவந்து பல சாதனைகளைப் புரிந்தார். அந்தக் காலகட்டத்தில் ரஷ்யா என்பது உலகைப் பொறுத்தவரையில் ஒரு இரும்புத் திரையின் பின்னால் இருந்த ஒரு தேசம். அங்கு என்ன நடக்கின்றது என்று உலகில் யாருக்குமே தெரியாது. அப்படிப்பட்ட ரஷ்யாவிற்குள் பல்வேறு வேஷங்களில் நுழைந்து, அங்கிருந்து இரகசியங்களைத் திருடுவதும், அந்த இரகசியங்களை பிரித்தானியாவுக்குக் கடத்தி வருவதும் இலகுவான ஒரு காரியமல்ல.

ஆனால் அதனைச் சாதித்துக் காட்டினார் சிட்னி ரெய்லி. அது மாத்திரமல்ல அப்பொழுது இருந்த லெனினின் ஆட்சியைக் கலைத்துவிட்டு சிட்னி ரெய்லியை அதிபராக்கும் இரகசியச் சதித்திட்டமும் பிரித்தானியாவிடம் இருந்தது. அந்த நோக்கத்திலும் பல காய்கள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தன ரஷ்யாவில். சோவியத்தின் இராணுவத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தில் சிட்னி ரெய்லி என்ற இந்த மோசமான உளவாளி பற்றி தெரியவந்த பொழுது, ரஷ்யாவில் தங்கியிருந்த அவர் மிகவும் சாதுர்யமாகத் தப்பி பிரித்தானியா வந்து சேர்ந்தார். மிகவும் பாதுகாப்பாக அங்கு அமர்ந்தும் கொண்டார். அதன் பின்னர் பிரித்தானியாவில் இருந்தபடியே ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதிவேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

இந்த சிட்னி ரெய்லியை கைது செய்தது தான் Operation Trust' என்ற இராணுவ நடவடிக்கையின் மிகப் பெரிய வெற்றி என்று வரலாற்றில் பதிவாகி இருக்கின்றது.

எப்படிக் கைதுசெய்தார்கள்?

கைது செய்யவில்லை. ஒரு வகையில் சதி செய்து கடத்திச் சென்றார்கள் என்று கூறலாம்.

10ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## வடக்குகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்னவாகப் போகின்றது

முப்பது ஆண்டுகால யுத்த வரலாறு என்பது தமிழினத்தின் தாயகம். வடகிழக்கு என்பதை கோடிட்டு காட்டியது மட்டுமன்றி. தற்போதைய சூழ்நிலையில் திசைமாறும் வகையில் இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது. அவர்களோடு இணைந்து சில சர்வதேச நாடுகளும். தமிழ் ஒட்டுக்குழுக்களும் செயற்பட்டு வருகின்றன. இதனை முறியடிக்கும் வகையில் தமிழ்த் தரப்பு என்ன செய்யபோகின்றது என்பது தான் இன்றைய கேள்வியாக எழுந்துள்ளது.

தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை இவற்றை அடைவதற்கான வழிகளை எல்லாம் இலங்கை அரசு திட்டமிட்டு அடைத்து வருகிறது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட துரோகங்களும். இனப் படுகொலைகளும். குறிப்பாக 140.000 பேர் வரை காவுகொள்ளப்பட்ட துன்பியலான சம்பவமானது திட்டமிட்டு சிங்கள பேரினவாத அரசினால் மேற்கொள்ளப்பட்டதொன்றாகும். ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளையும். தமிழ் மக்களையும். பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திய சர்வதேசமும். இலங்கை அரசும் இன்று வரலாறு காணாத பூகோள அரசியல் நெருக்கடிக்குள் சிக்குண்டு போய் உள்ளது.

தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட வேண்டிய கோரிக்கைகளாக தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை சார்ந்த அரசியல் தீர்வு. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். காணி அபகரிப்பு நிறுத்தப்படுதல். கட்டாய மதத் திணிப்பு. வடகிழக்கு இணைப்பு. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றை உள்ளடக்கியதான ஒரு தீர்வுதிட்டம் தான்.

இவற்றை நகர்த்துவதற்கான உரிய சந்தர்ப்பமாக காலமும் நேரமும் அமைந்துள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்க தொடக்கம் ரணில் விக்கிரமசிங்க வரை இனவாத. மதவாத. தேசியவாத அடிப்படைக் கொள்கைகளை கொண்டே தமிழினத்தின் மீது தொடர்ந்தும் இன அழிப்பு யுத்தத்தை மேற்கொண்டார்கள். அப்பாவித் தமிழ் மக்கள் அழிவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாமல் போனது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதனை தடுத்து நிறுத்துவதற்கு அப்போதைய நிலையில் தயாராக இல்லை என்பது தான் உண்மை. அந்த நேரத்தில் இந்திய இராணுவத்துடன் தமிழ் அமைப்புக்கள் சில கைகோர்த்துச் செயற்பட்டன என்பது வரலாறு. இவர்கள் உயிருக்கு அஞ்சி தமிழ் மக்களை காட்டிக்கொடுத்து தெற்கில். வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கையினை வாழ்ந்துகொண்டிருந்தனர்.

எனவே தற்போது இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கின்ற போது வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை நாடியிருக்கிறது. ஆறு அமைப்புக்களுக்கானத் தடை இலங்கையில் நீக்கப்பட்டுள்ளது. இவர்களது முதலீடுகளை இலங்கை இன்று எதிர்பார்க்கிறது. இதற்குள்ளும் குழப்பவேலைகளைச் செய்ய தெற்கின் பல அரசியல்வாதிகள் தயாராகி இருக்கிறார்கள்.

தமிழ்த் தரப்பு இன்றைய இலங்கையின் சாதகத் தன்மைகளை தமக்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குள் மோதல் போக்கு வெடித்துள்ளது. இன்று ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொதுவெளியில் விமர்சித்து வருகின்றமையைக் காணமுடிகின்றது. ஊடகங்களில் தோன்றி செவ்வி வழங்கும் அளவிற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையில்லாத தன்மை தலைதூக்கியுள்ளது. இவ்வாறான உட்கட்சிப் பிரச்சினைகள் தமிழ் மக்களின் எதிர்கால அரசியலுக்கு பாதகமாகவே அமையும் என்பதை உணர்ந்து. அனைத்துத் தமிழ் கட்சிகளும் தமிழினத்திற்கான தத்தமது கடமை என்னவென்பதை அறிந்து கொண்டு செயற்படவேண்டும்.

# 189 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



மேலே கெரில்லா எதிர்ப்புச் சமரின் பொதுவான கோட்பாடுகள் தரப்பட்டுள்ளன. இவ்வாறே ஜேர்மனியர்கள் எங்களது (சோவியத் ரசியாவினது) நிலப்பரப்பில் செயற்ப்பட்டார்கள். இவ்வாறே அமெரிக்கர்கள் வியட்நாமில் செயற்ப்பட்டார்டகள்.

இவ்வாறே சோவியத் ரசியா பஸ்மாச்சுக்களையும் (மத்திய ஆசியாவிலிருந்த சோவியத்திற்கெதிரான ஆயுதக்குழுக்கள்) மேற்கு உக்ரேனிலிருந்த உக்ரேனியத் தேசியவாதிகள் அமைப்பு - உக்ரேனியக் கெரில்லா இராணுவத்தின் பென்ஜெரவ் அமைப்பையும் பால்டிக் குடியரசுகளிலிருந்த பச்சைச் சகோதரர்களையும் போரின் பின்னான காலத்தில் களவிலீடுபட்ட கொள்கைக் குழுக்களையும் அழித்தது.

இந்த முறையே தென்னமெரிக்காவில் கூடியலவிளாகத் தோன்றுகின்ற புரட்சியமைப்புக்கள். போதைப்பொருள் மாபியாக் குழுக்கள் ஆகியன அழிக்கப்படுகின்றன. வரலாற்றுத் தரவுகளின் படி. கெரில்லா அமைப்புக்களுடன் உண்மையான சமரொன்றைப் புரிந்தால். அவை அழிந்துபோய் விடுகின்றன.

காட்டில் சமர் புரிதல் நியமத்திற்கு மாறான தீர்மானங்களை வேண்டிநிற்கின்றதுடன். அறிவுறுத்தல்கள். கட்டளைகள். நடவடிக்கைகள் ஆவணங்கள் போன்றவற்றின் வரையறைக்குள் அவை எழுதப்படுவதுமில்லை. சண்டைப் பாதைகளில் செயற்படுகின்ற தேடுதலாளர்களிடம் உச்சதிறன்மிகு கண்டுபிடிப்பு (படைப்பு). வழக்கத்திற்கு மாறான சிந்தனைத்திறன். நரகச் சகிப்புத்தன்மை ஆகியன வேண்டப்படுகின்றன. ஜேர்மனியர்களிடத்தில் இவ்வாறான ஆட்கள் ஏகர்கள் என அழைக்கப்பட்டனர். ரசியர்களிடத்தில் எவ்வகையிலும் அழிக்கப்படவில்லை.

ஏனெனில். லவ்ரேன்ரி பேரியா தனக்குக் கீழுள்ளவர்களை உயர்பண்புமிகு மௌனம் (இரசியத்தன்மை) பேண நிர்ப்பந்தித்தார். வெவ்வேறு நாடுகளில் இவ்வாறான ஓநாய் வேட்டையாடுகின்ற நாய்கள் ஒரேயொரு பண்பைக் கொண்டவர்களாக இருந்தனர். அதாவது. காட்டில் சமர் புரிதல் என்பது அவர்களது வாழ்க்கை முறையாகவே இருந்தது. கெரில்லாக்களுக்கெதிரான செயற்பாடுகள் ஐக்கிய அமரிக்க இராணுவத்தின் அறிவுறுத்தல் ஐக்கிய அமரிக்க இராணுவத் தலைமை கெரில்லாக்களுக்கெதிரான செயற்பாடுகளுக்கான சட்டங்களை உருவாக்குவதில் அதிக அக்கறை செலுத்துகின்றது.

இவ்விடயத்தில் அமெரிக்க இராணுவத்தின் அறிவுறுத்தல்கள். சட்டவிதிகள் போன்றவற்றில் குறிப்பிடப்படுகின்றன. அவற்றிலொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. "இன்றைய காலத்தில் உலகின் பல பாகங்களிலும் கெரில்லாப் போராட்டங்கள் பிரசித்தி பெற்றிருக்கின்றமையால். கெரில்லாச் செயற்பாடுகளின் சாராம்சம் என்னவென்பதைப் பூரணமாகக் கண்டறியவேண்டிய உண்மையான அவசியம் தோற்றம் பெற்றிருக்கின்றதுடன். அவற்றுடன் சமர்புரியும் முறைகளையும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது."

அமெரிக்கக் கட்டளையகத்தாலும் ஐக்கிய அமெரிக்காவின் சிறப்புப் பிரிவுகளாலும் ஒட்டுமொத்த ஆயுதப் போராட்டத்தின் ஓர் அங்கமாகக் கெரில்லா எதிர்ப்புச் செயற்பாடுகள் கருதப்படுகின்றன. அத்துடன் கெரில்லா எதிர்ச் செயற்பாடுகள் கருதபடுகின்றன. அத்துடன் கெரில்லா எதிர்ச்செயற்பாடுகள் பூரண இராணுவம். துணை இராணுவம். அரசியல். உளவியல். பொருளாதாரம். நிர்வாகம் ஆகியன சம்மந்தப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

### கெரில்லா எதிர்ப்புப் போரின் இலக்கு

கெரில்லா எதிர்ப்புப் போராட்டத்தின் இறுதி இலக்காகக் "கெரில்லாக்கள். நிரந்தரமற்ற படைகள் (கெரில்லாக்களுக்குச் சகலவகையிலும் ஆதரவளிக்கின்ற பிரதேச மக்களின் சகல வலிமைகளும் நிரந்தரமற்ற படைகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன) ஆகியவற்றை அழித்தலும் அவர்களது மீள்கட்டமைப்புக்குத் தடையாகவிருக்கின்ற சூழ்நிலைகளைத்தோற்றுவித்தாலுமாகும்." கெரில்லா எதிர்ப்பு போரியல் அமெரிக்க கொள்ளையாளர்களும் இராணுவத் தலைவர்களும் இரண்டாம் உலகப்போர். தேசிய விடுதலை அமைப்புக்கள் போன்றவ்றினது அனுபவங்களின் அடிப்படையில் விளங்கிகொள்வது யாதெனில். எப்பொழுதும் கெரில்லா அமைப்பு மக்களின் ஆதரவை பயன்படுத்துகின்றதோ அப்பொழுதே அது மிகவும் வினைத்திறன்மிக்கதாக விளங்குகின்றது. இதன் காரணத்தாலேயே. கெரில்லாக்களுடன் வெற்றிகரமாகச் சமரிடுவதற்கு மிகவும் உகந்த சூழ்நிலையாக. அவர்கள் பிரதேச மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாகவும் வெளியிலிருந்து ஆதரவு பெறமுடியாதவர்களாகவும் இருக்கவேண்டுமெனக் கருதுகின்றார்கள்.

மேற்குறிப்பிட்ட இலக்கை எட்டுவதற்காகப் பின்வரும் பிரதான பணிகள் நிவர்த்தி செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

**அவையாவன**

கெரில்லா படைகளதும் அவர்களது வேவுக் குழுக்களதும் செயற்பாட்டுப் பிரதேசங்கள். முகாம்கள். போக்குவரத்துப் பாதைகள் போன்றவற்றைக் கண்டு கொள்ளல். அவர்களது பணி.சாத்தியமான செயற்பாடுகளின் பண்புகள்.வேவுத் தகவல்களையும் பொருளுதவிகளையும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் வழிகள்ஆகியவற்றை தெரிந்துகொள்ளல்.

பிரதேச மக்களிலிருந்தும் ஒன்றிலிருந்து இன்னொன்றுமாக நிரதரமற்ற படைகள் உருவாகுவதைத் தடுத்தலும் ஏதாவது உதவிகளை (இராணுவ.பொருள்) அவர்கள் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் சாத்தியத்தை பறித்தலும்.

நிரந்தரமற்ற படைகளின் மனநிலையை உடைத்தலும் அவர்களுக்குள்ளிருந்தே அவர்களைச் சீர்குலைத்தலும். பிரதேச மக்களைத் (அல்லது அவர்களின் ஒரு பகுதியினரையேனும்) தம்வசம் இழுக்கும் நோக்கில் அரசியல்.பொருளாதார. சமூக மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் கெரில்லா அமைப்புத் தம்மை பூரணப்படுத்துவதைத் தடுத்தலும்.

நிரந்தரமற்ற அமைப்புக்களை அழித்தலும் சாத்தியமான செயற்ப்பாட்டு இலக்குக்கு அவர்கள் செல்வதை தடுப்பதற்கான தடைகளை உருவாக்குதலும் ஆகும்.

தொடர்வான்....

# 2000நாட்களை கடந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம்

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இன்று இடம் பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் உண்மையிலே அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்கின்ற ஒரு செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரியவில்லை. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தகவல்களை அரசாங்கம் மூடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவே தெரிகின்றது.

2000ம் நாட்கள் கடந்தும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கபட்டோருடைய ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து செல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது ஒவ்வொருகாலகட்டத்திலும்மாறிமாறிவந்த அரசாங்கங்கள் இனப்படுகொலைக்கான ஒரு தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையியே காணப்படுகின்றது.

இன்று (ஆகஸ்ட் 30) சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம். இதனை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் கவனயீர்ப்பு பேரணி ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்த கவனயீர்ப்பு பேரணியில் கலந்துகொண்டிருந்தனர். புதுக்குடியிருப்பு வைத்தியசாலை சந்தியிலிருந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் வினோதரலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், சாந்தி ஸ்ரீகாந்தராசா மற்றும் மாகாணசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். வவுனியா பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, வவுனியா நகரின் ஊடாக பழைய பஸ் நிலையம் வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதனிடையே, 2018 ஆம் நாளாக வவுனியா பழைய தபால் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தமிழர் தாயகம் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் பழைய தபால் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும் யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். இந்த கவனயீர்ப்பில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதனிடையே, யாழ். நாவலர் வீதியிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்பாகவும் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றிருந்தனர்.

மன்னார் மாவட்டத்திலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி, மன்னார் மத்திய பிரதான வீதி, சுற்றுவட்ட வீதி வரை சென்று அங்கு கவனயீர்ப்பும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கந்தசுவாமி ஆலயம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு, தமது பிள்ளைகளின் நிழற்படங்களையும் பதாகைகளையும் ஏந்தியவாறு கோஷ ங்களை எழுப்பி அவர்கள் கவனயீர்ப்பில் பங்கேற்றனர். திருகோணமலை காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினரும் அனுராதபுரம் சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று கவனயீர்ப்புப் பேரணியொன்றை முன்னெடுத்தனர். மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் பேரணி, பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகாமை வரை சென்றதுடன், அங்கு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை - திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அம்பாறை அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி, திருக்கோயில் மணிக்கூட்டு கோபுரம் வரை இடம்பெற்று, அங்கு கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. வலிந்து காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவுகளைத் தேடி பலரும் போராட்டத்தில் ஈடுபடுகின்ற நிலையில், சிலர் உயிரிழந்த துர்பாக்கிய சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மந்துவில் கிராமத்தை சேர்ந்த அல்பிரட் தினு என்ற இளைஞர் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது காணாமற்போயுள்ளார். 6 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்த மகனான அல்பிரட் தினு தனது 16 ஆவது வயதில் காணாமற்போயிருந்தார். தாய் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், அல்பிரட் தினு தன்னுடைய அம்மம்மாவுடனே இளமைப் பருவத்தைக் கழித்துள்ளார். இறுதி யுத்தத்தின் போது இவர் காணாமற்போன நிலையில், அவரின் பாட்டி தனது பேரனைத் தேடி போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில், 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அல்பிரட் தினுவின் பாட்டியான செல்வம் சிவபாக்கியம் காலமானார். இது வரையில் அந்த போராட்டங்கள் எல்லாம் பயனளிக்காத ஒரு நிலையும்,போராட்டத்தில் உறவகளை தேடியவர்கள் மரணித்த ஒரு நிலையுமே காணப்படுகின்றது.

தற்பொழுது கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலே இலங்கையில் புலிகளுடனான யுத்தத்தின்போது, ராணுவம் போர்க் குற்றங்களை இழைத்தது என்ற குற்றச்சாட்டுகள் "நம்பத்தகுந்தவை" என இது குறித்து விசாரிக்க அரசு நியமித்த ஓய்வு பெற்ற நீதிபதி மாக்ஸ்வல் பரனகமவினுடைய அறிக்கை ஊடாக முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்ட பொழுதும் அவையும் கைநழுவி போய் இருக்கின்றது.




இந்நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் கையெழுத்திடப்பட்ட மனு ஒன்று பிரித்தானிய பிரதமர் அலுவகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள பெரும்பாலான தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து, நேற்று செவ்வாய்க்கிழமை, லண்டன் ரவர்கார் சதுக்கத்தில் (வுசயகயடபயச ளுஙரயசந) மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தன.

இந்த போராட்டத்தின் போதே பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் மனு கையளிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான சர்வதேச நாளை நினைவுகூரும்வகையிலும், இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

**தொடர் போராட்டத்தின் போதும் கிடைக்காத நீதி**

2009 ஆம் ஆண்டு இறுதியுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத்திடம் கையளித்து காணாமலாக்கப்பட்ட மற்றும் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு மற்றும் பல்வேறு வகைகளிலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி 2000 நாட்களைக் கடந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர்ச்சியாக பலவேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன.

இருந்தபோதிலும் இதுவரை அவர்களிற்கு உரிய நீதி கிடைக்கவில்லை. இந்நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட இம்மனுவில், போர்க்குற்றங்களில் ஈடுபட்ட அனைவரையும் சர்வதேச நீதிமன்றில் முன்னிறுத்தி உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

மேலும் தம் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமான சிங்கள் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழ் மக்களிற்குரிய நிலங்களிலிருந்து உடனடியாகஅகற்றப்படவேண்டுமெனவும், தமிழ் அரசியல் கைதிகளாக சிறையில் வாடும் உறவுகள் எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும், தமிழ் மக்களிற்குரிய சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் அந்த மனு மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மறுபக்கத்திலே பார்க்கின்ற பொழுது சர்வதேச ரீதியாக எடுக்கின்ற சர்வதேச மன்னிப்புச்சபை அது மட்டுமல்ல உச்ச நீதிமன்றம் போன்றவற்றின் ஊடாக அங்கு நூற்றுக்குமேற்பட்ட மனித உரிமைகுழுக்கள் ஜெனீவாவிலே இடம்பெறுகின்ற கூட்டத்தொடரிலே பேசுவதன் ஊடாக அதனூடாக ஒரு தீர்வினை எட்டமுடியும் என்று பார்த்தால் அதுவும் தற்பொழுது கிடப்பில் போடப்பட்டதாகவே இருக்கின்றது.

ஆகவே இதற்கான அடுத்தகட்ட நகர்வை எவ்வாறு தமிழ் தரப்பு மேற்கொள்ள வேண்டும் என்று பார்ப்போமாக இருந்தால் ஒட்டுமொத்த தமிழ் அரசியல் தலைமைகளும் ஒன்றுதிரல்வதனூ டாக பாராளுமன்றத்திலே ஒரு எதிர்ப்பு ஆர்பாட்டத்தை தோற்றுவிப்பதன் ஊடாகவே இதற்கான ஒரு தீர்வை கொண்டு வர முடியும். இந்த அரசாங்கம் ஒரு இனப்படுகொலையை மேற்கொண்டது என்று ஆகவே இந்த இனப்படுகொலையை வலியுறுத்தி சர்வதேச நீதிமன்றத்திலே அதாவது ஒரு தீர்ப்பை எடுக்க கூடிய வகையிலே வடகிழக்கு இணைக்கப்பட்ட தமிழர் தாயகத்திலே தமிழர்களும் ஒரு சுயநிர்ணய உரிமையுடன் வாழ கூடிய ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் அணைவரது எதிர்ப்பார்பாகவும் இருக்கின்றது.

இதற்கான ஒருதீர்வை கொடுக்கவேண்டும். அல்லது அவர்களுக்கான மரணசான்றிதழ் வழங்கி இவ்வாறு இந்த போராட்ட களத்தில் எதிர்த்தவர்கள் எத்தனையோ பேர் தற்பொழுது வயதாகி இறந்து விட்டார்கள். தங்களுடைய பிள்ளைகளை காணவில்லை என்ற ஏக்கத்துடன் அவர்கள் மரணித்திருக்கின்றார்கள்.

ஆகவே உடனடியாக இந்த அரசாங்கத்திற்கு தமிழ் அரசியல் தலைமைகள் குரல் எழுப்பி தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்து தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில் இவர்கள் செயற்பட வேண்டும் என்பதே இன்றைய கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருடைய நிலைமைகளை மேலும் எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்பதே இன்றைய நிலைப்பாடாகும்.

**இரணியன்**

# பிரபாகரன் ஏன் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்? வரலாறுகளை மூடிமறைக்கிறது அரசு

சிங்களத் தலைவர்கள் பழைய தேசியக்கொடியையே புதிய தேசியக்கொடியாக வடிவமைத்தனர். இந்தக் கொடியை எதிர்த்து தமிழ்மக்கள் மஞ்சள் நிறத்திலான கொடியை தமது இடங்களில் ஏற்றினர். எஸ்.ஜே.வி செல்வநாயகம் என்ற தமிழ்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் தமிழர் தாயக கொடியினை ஏற்றி தனது காரில் பாராளுமன்றத்திற்கு சென்றார். பின் சிங்கள அரசு தேசியக்கொடியில் இரண்டு வர்ணங்களைச் சேர்த்து. பச்சை வர்ணம் முஸ்லிம்களையும், செம்மஞ்சள் தமிழர்களையும் குறிப்பதாக அமைந்தது.

இப்படியாக இனவாதப்போராட்டம் சுதந்திரம் கிடைத்ததிலிருந்தே ஆரம்பமானது. இலங்கையில் உள்ள முக்கிய கட்சிகளும் பாரம்பரிய சிங்கள குடும்பங்களிலிருந்தே வந்தவையாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியை பொறுத்தவரையில், பண்டாரநாயக்க குடும்பம். ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரையில் D.S சேனநாயக்க குடும்பம். அதிகாரம்மிக்க பணக்காரர் குடும்ப வர்க்கத்தினை உடையவர்கள். அரசியலில் ஆளுமையை நிலைநிறுத்த குடும்பங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

தமிழர் பிரச்சினை ஒரு பகடைக்காயாக பயன்படுத்தப்படுகிறது. 1948ம் ஆண்டு பிரதமர் D.S சேனநாயக்க, இந்திய -பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்திய வம்சாவழி தோட்டத்தொழிலாளர் குடியுரிமையை பறிக்கநினைத்தார். டிசம்பர் 10 பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தது. 19 தமிழ் உறுப்பினர் எதிர்த்ததால் இச்சட்டத்தை தடுக்க முடியவில்லை. ஒரேநாளில் 10இலட்சம் தமிழ்மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தினை உயர்த்த பல தலைமுறைகளாக உழைத்த தமிழர்களை தொடர்ந்தும் ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் வலுக்கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றின. 1949ல் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை இல்லை என்றனர். பல தமிழர்கள் சிலோன் காங்கிரஸில் இருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியில் எஸ்.ஜே.வி செல்வநாயகம் தலைமையில் ஆரம்பித்தனர். 1953ல் அரசியல் ரீதியாக சேனநாயக்கவை புறந்தள்ள சிங்களவரும், தமிழர்களும் சமமானவர்கள் என கூறிய பண்டாரநாயக்கா தான் வெற்றிபெற்றால் 24மணித்தியாலயத்திற்குள் சிலோனை பௌத்த நாடாக மாற்றுவேன் என்றும், சிங்களம் மட்டுமே அரச மொழியாக இருக்கும் என்றும் சிங்களவர் அல்லாதோரின் ஆளுமைகள் ஒடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

1956ல் பண்டாரநாயக்கவின் ஒட்டுவங்கி அரசு வெற்றிபெற்றது. தன்னை சிங்கள இன பாதுகாவலன் என அறிவித்தார். அவரின் ஆட்சிஇரு உறவுகளுக்குமிடையில்பெரிதும் பாதித்தது. சிங்களம் மட்டுமே அரச மொழி என சட்டம் இயற்றி, தமிழர் பகுதிகளுக்கும் இது பொருந்தும் என்றார். கம்யூனிஸ்ட் கட்சியின் R.B சில்வா பாராளுமன்றத்தில் ஒரு மொழி என்றால் இரு நாடுகள் மலரும் என்று அழுதுகொண்டே கூறினார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் ஆர்ப்பாட்டம் செய்தனர். சிங்கள இனவாதிகள் அவரைத் தாக்கினர். பின்னாளில் அரங்கேறப்போகும் இரத்தச்சரித்திரம் அன்று தான் ஆரம்பமாகியது. தமிழ் சிங்கள சட்டத்தினை எதிர்த்த கம்யூனிஸ்ட் கட்சியின் வீடுகள் தாக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்மக்களுக்காக குரல்கொடுப்பதை படிப்படியாக குறைத்துக்கொண்டது. ஜூன் 5,6ம் திகதிகளில் தமிழர் மீது முதற்தாக்குதல் ஆரம்பித்தது. பின்னர் தொடர்ச்சியாக கிழக்குமாகாணத்திற்கும் பரவியது. 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல சொத்துக்களும் சூறையாடப்பட்டது. தமிழர்கள் தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். பின்னர் இலங்கையரசு மக்கள் தொகை விகிதாசாரத்தினை மாற்ற தீவிரமாக செயற்பட்டது.

படிப்படியாகத் திட்டமிட்டு தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. இப்பகுதிகளில் சிங்களவரின் விகிதாசாரங்கள் அவர்களுக்குச் சாதகமாக அமையக்கூடியது. விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் 44 புதிய சிங்களக் கிராமங்கள் கிழக்குமாகாணத்தில் உருவாக்கப்பட்டது. அதில் 06 கிராமங்கள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் காடுகள் அழிக்கப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் உருவாக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் அமர்த்தப்பட்டது. தென்பகுதியில் மீனவர்களை சிங்கள அரசு இடையிடையே குடியமர்த்தியது.

இத்தகைய குடியமர்த்தல்களே மோதல்களுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. மெதுமெதுவாய் உருவாக்கப்பட்ட கலவரங்கள், கோவிலில் உறங்கிக்கொண்டிருந்த குருக்களை தீமூட்டிக்கொழுத்திய சம்பவமும், தமிழர்களை உலுக்கிய மற்றுமொரு சம்பவமாக.ஒருகுழந்தையை கொதிக்கின்ற தாரில் போட்ட சம்பவமுமாகும். தமிழ் இளைஞர்கள், சிங்கள மக்களை ஏன் எதிர்த்து தாக்கக்கூடாது என்ற கேள்வியை எழுப்பினர். செல்வா தமிழர் மாநாடு ஒன்றினைக் கூட்டினார். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இலங்கையரசிற்கு ஓராண்டு கால அவகாசம் வழங்கினார்.

ஜூலை 26,1957 அரசு ஒரு சமாதானத்திற்கு வந்து, பண்டாரநாயக்க செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில் அரசின் சில வாக்குறுதிகளாக, தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை அரசு கைவிடும், தமிழ் மொழியும் அரச மொழியாக சட்டம் நிறைவேற்றப்படும், வடகிழக்கு மாகாணங்களில் பிராந்திய மொழியாக இருக்கும். பிராந்திய சபைச் சட்டங்கள் மூலம் பிராந்திய சட்ட உரிமைகள் வழங்கப்படும். ஜே.ஆர்.ஜெயவர்த்தன இதனை எதிர்த்து கொழும்பிலிருந்து கண்டியிலுள்ள பண்டாரநாயக்கவின் இல்லத்திற்கு நடைபயணம் மேற்கொண்டார்.

இதன் விளைவாக தமிழ் ஆட்சிமொழியானதே தவிர மற்ற எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 1958ல் தமிழர் பகுதிகளிலும் வாகனப் பதிவேட்டில் சிங்கள எழுத்துக்கள் பயன்படுத்தவேண்டும் என கேட்டுக்கொண்டது அரசு. தமிழர்கள் இதனை தார்கொண்டு மறைத்தனர். இதனால் மே 25ல் தமிழர்களுக்கெதிரான கலவரம் மீண்டும் ஆரம்பமாகியது. பொலநறுவையில் ஆரம்பித்து கொழும்பு,



அநுராதபுரம், யாழ்ப்பாணம் என பரவி 400 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து பண்டாரநாயக்கா தமிழர் பகுதிகளில் தமிழை மட்டும் பயன்படுத்த ஒப்புக்கொண்டார்.

இதனை எதிர்த்து பௌத்த துறவிகள் அவரின் இல்லத்தின் முன்னால் போராட்டங்களை நடத்தி, அவரை சிங்கள எதிரி என வர்ணித்து பண்டாரநாயக்கா செல்வா ஒப்பந்தத்தை கைவிடவும் வலியுறுத்தினர். இதனை எதிர்த்த தமிழர்களை இனவாதிகள் தாக்கினர். எங்கும் கலவரங்கள் இடம்பெற்றது. 1959ல் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் போக, எதிர்ப்புக்களை மீறி ஒப்பந்தத்தை அமுல்படுத்த முயன்றார். செப்டெம்பர் 25ல் சோமராம தேரர் என்ற பௌத்த துறவியினால் பண்டாரநாயக்கா அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார். 1960ல் பண்டாரநாயக்காவின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமரானார். ஜனவரி 01ல் தமிழர் பகுதிகளிலும் சிங்கள மொழியே அரசகரும மொழி என அறிவித்தார்.

ஜனவரி 02ல் செல்வா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு நாள் கடை அடைப்புக்கும் அழைப்புவிடுத்தார். இந்தப் போராட்டம் பல இடங்களுக்கும் பரவியது. அரச அலுவலகங்களுக்கு வெளியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் போராட்டங்களை நடத்தினர். 50 நாட்களுக்கும் மேலாக இது தொடர்ந்தது. தமிழ்மக்கள் மீது பொருளாதாரத் தடையை ஏற்படுத்த, இலவச அரிசியினை வழங்க மறுத்தது அரசு. தந்தை செல்வா சட்ட எதிர்ப்பு போராட்டத்தினை அறிவித்தார்.

1961ஏப்ரல் 14 தமிழ் வருடப்பிறப்பன்று, தமிழர் பகுதிகளுக்கான தபால் சேவைகளை அறிவித்து தமிழீழ தபால் தலையை வெளியிட்டார் தந்தை செல்வா. பத்தாயிரத்திற்கும் மேலானோர் வரிசையில் நின்று அதனைப் பெற்றுக்கொண்டனர். ஏப்ரல் 17அன்று அவசரகாலநிலையை பிரகடனம் செய்து, அனைத்து தமிழ்த் தலைவர்களையும் கைது செய்து, 03 ஆண்டுகள் தடைசெய்தது இலங்கையரசு. 1965ல் இரண்டு கட்சிகளும் அரசமைக்க ஆசனங்கள் போதுமானதாக இல்லை. டட்லி சேனாநாயக்க தமிழரசின் ஆதரவினைக் கேட்க, செல்வாவிற்கு கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக டட்லி உறுதியளித்து ஆதரவினைப் பெற்றார். சில கட்சிகளின் தமிழீழ கோரிக்கைகளை செல்வா நிராகரித்தார். ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மாநிலம் போதும் என்றார்.

பம்பலபிட்டி பௌத்த விகாரையில் உள்ள பௌத்த பிக்குவின் அறிக்கையில், அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு படைகளை அனுப்பி தமிழர்களை வெளியேற்றி சிங்களவர்களை குடியேற்ற வேண்டும் என்றார். அரசும் அவரின் கோரிக்கைகளை அமுல்படுத்த முனைந்தது. செல்வா அரசிற்கு வழங்கி வந்த ஆதரவினை திரும்பப்பெற முற்பட்டார். டட்லி உடனே ஒரு சமாதானத்திற்கு வந்து இரண்டாவது முக்கிய ஒப்பந்தமான டட்லி செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

முந்தைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் தமிழர் பகுதிகளில் மாகாணசபைகள் உருவாக்கப்படும் என்றும் உறுதியளித்தார். அரசு வெள்ளையறிக்கையிலும் இதனை வெளியிட்டது. மீண்டும் பௌத்த மதத்தினர் இதனை தடுத்தனர். 1968ல் ஒப்பந்தம் அமுலாக்கப்படாததை கண்டித்த செல்வா, அரசிற்கு கொடுத்து வந்த ஆதரவினை திரும்பப்பெற்றார். தமிழ் இளைஞர்கள் மிதமான போராட்டங்கள் இனி பயன்பெறாது, ஆயுதப்போராட்டமே பயனளிக்கும் என நினைக்கஆரம்பித்தனர். இந்த எண்ணவோட்டத்திற்கு சிவகுமாரன் என்கின்ற இளைஞனே முக்கிய காரணமாக இருந்தார். 1969ல் தமிழ் விடுதலை இயக்கம் குட்டிமணி, தங்கதுரை என்ற இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1970ல் சிறிமாவோ ஆட்சியமைத்தார். இந்தத்தேர்தலில் பிரிவினைவாதத்தை முன்வைத்த தமிழ்க்கட்சிகள் வெற்றிபெறமுடியாமல்போயின. 1970-77 வரை தமிழர்கள் கலவரங்களுக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டனர். சிறிமாவோ தமிழ் பத்திரிகைகளுக்கும், தமிழ் புத்தக வெளியீடுகளுக்கும் தடைவிதித்ததோடு தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழ்த் திரைப்படங்களுக்கும் தடைவிதித்ததோடு இந்தியாவினுடைய கலாசார இணைப்பைத் துண்டித்தார்.

11ஆம் பக்கம் பார்க்க...

**நெற்றிபொறியன்**

# TELO, EPRLF போன்ற இயக்கங்களை புலிகள் தடை செய்தது ஏன்?

எனது நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முக்கியமான விடயம் ஒன்றை கையில் எடுத்துள்ளேன். "சகோதரப்படுகொலை" என்று, தமிழர் தேச எதிர்ப்பாளர்களால் புனையப்பட்ட.சம்பவத்தின் பின்னால் உள்ள நிஜங்கலையே உங்களோடு பகிர விளைகின்றேன். "சகோதரப்படுகொலை" என்னும் சொல்லை முதல், முதலில் அறிமுகப்படுத்தியவர் கலைஞர் கருணாநிதி தான். அடுத்ததாக சுப்பிரமணியசாமி (இவர்கள் இருவரும் TELO அமைப்பின் தீவிர ஆதரவாளர்கள்) அடுத்ததாக இவற்றை பல கற்பனைகளுடன், உண்மைக்கு புறம்பாக பொய்களை புகுர்த்தி, எழுதி வந்தவர் EPDP இன் தினமுரசு பத்திரிக்கை ஆசிரியர் அற்புதன் (இவர் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்) ஆகும். இவர்களாலேயே உண்மையை, திட்டமிட்டு மறைக்க முயற்சி செய்யப்பட்டது. இவர்களது பொய்களை இன்றும் சிலர் நம்பத்தான் செய்கிறார்கள். புலிகள் ஏன் மாற்று இயக்கங்களை தடை செய்தார்கள். இது ஒரு சிறிய கேள்வி தான். ஆனால் இதன் பின்னால் கண்ணுக்கு தெரியாத எமது போராட்டத்திற்கு, எதிரான காரணங்கள் நிறையவே இருந்தன. அதற்கு கொஞ்சம் பின்நோக்கி சென்று பார்க்க வேண்டும்.

சிங்கள அடக்கு முறைக்கு எதிராக தமிழர் கிளர்ந்தெழுந்த போது பல ஆயுதக்குழுக்கள் ஈழத்தில் தோன்றின. ஒவ்வொரு தலைவரின் கீழும் பல இளைஞர்கள் உண்மையான தேசப்பற்றில் தான் போராட புறப்பட்டனர். ஆனால் அந்த தலைவர்கள் உண்மையுடனும், விசுவாசத்துடனும் இருந்தார்களா என்பது தான் கேள்விகுறி?

இதில் 1983ம் ஆண்டு புலிகளின் கண்ணிவெடித்தாக்குதலுக்கு பின்னர் தான் இந்த அமைப்புகள் கொஞ்சம் வீரியம் பெற்றன. சில ஆயுதக்குழுக்களும் புதிதாக உருவாகி இருந்தன. இந்த ஆயுதப்போராட்டங்கள் ஆரம்பித்த 1980களில் சிங்கள அரசு அமெரிக்கா மற்றும் இஸ்ரவேலுடன் நட்புறவை பேணியது. இது அப்போதைய இரசிய (USSR ) சார்புடைய இந்திய அரசுக்கு கோபத்தை உண்டாக்கியது.

அதனால் சிங்கள அரசை அடிபணிய வைக்க இந்திராகாந்தி எடுத்த முடிவு தான் ஈழப்போராளிகளுக்கு பயிற்சியும், ஆயுதங்களும் கொடுத்தமையாகும். இந்திய அரசு பயிற்சியையும், ஆயுதங்களையும் வந்து பெறுமாறு எல்லா இயக்கங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எல்லா இயக்கங்களும் உடனேயே போய்விட்டன.

ஆனால் தலைவர் மட்டும் இந்த திட்டத்திற்கு பின் நின்றார். ஏனெனில் அன்றே தலைவர் இந்திய அரசின் கபடத்தை புரிந்து கொண்டிருந்தார். எங்கள் மக்கள் கூறும் பழமொழி ஒன்று **"நக்கினார் நாவிழந்தார்" என்பது. இந்திய அரசிடம் கடமைப்பட்டால், எல்லாவற்றுக்கும் அவர்களையே நம்பி இருக்கவேண்டி வரும் என்பதை தலைவர் திடமாக நம்பினார்.** அதனால் எந்த அழுத்தங்களையும் புலிகலமைப்புக்கு இந்திய அரசு போடக்கூடாது என்னும் வாக்குறுதியுடன், இறுதியாகவே இந்த பயிற்சி திட்டத்தில் புலிகள் இணைந்தனர்.

ஆனால், மற்றைய ஆயுதக்குழுக்கள் எந்த வித தூரநோக்கமோ, இந்திய அரசின் கபட எண்ணமோ தெரியாது, முதலாவதாக ஓடிச்சென்று பந்தியில் இருந்து, வாழை இலைக்கு சண்டை பிடித்துக்கொண்டிருந்தனர். அன்றே இந்திய ஆட்சியாளர்களுக்கு தெரிந்து விட்டது புலிகள் தங்கள் சொல்லுக்கு கட்டுப்பட மாட்டார்கள் என்று. அதனால் அடுத்த நிலையில் இருந்த TELO அமைப்பை தங்கள் சொல்லுக்கு கட்டுப்படும் அமைப்பாக மாற்றமுடியும் என்று கணக்கு போட்டு அவர்களுக்கு சிறந்த பயிற்சியும், பெரும் தொகையான ஆயுதங்களையும் வழங்கப்பட்டது. இதே போல TELO சொல்லு கேட்காக விட்டாலும் என்று எண்ணி இதே போல EPRLF அமைப்பிற்கும் எல்லா சலுகைகளையும் கொடுத்தனர்.



சில மாதங்களிலேயே எல்லா விதத்திலையும் பின் தங்கி இருந்த இரு அமைப்பும் பெரும் தொகை ஆயுத கையிருப்புடன் வலம் வந்தன. அதனால் தான் புலிகளமைப்பு சொந்தமாகவே அதி நவீன ஆயுதங்களான M-203,M-16,AK-47,RPG போன்ற ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தாயகம் கொண்டு வந்தனர்.

TELO அமைப்பின் தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் கைது செய்யப்பட்ட பின் (இவர்கள் இந்தியாவிற்கு தப்பிப்போக இருந்த இவர்களை, ஸ்ரீசபாரட்ணம் தான் காட்டிக்கொடுத்ததாக கிட்டண்ணை கூறும் போது கேட்டுள்ளேன்) ஸ்ரீசபாரத்தினம் அதன் தலைவராக வந்த பின், எந்தவித தனி ஆளுமையும் இல்லாது, இந்திய அரசின் சொல்படியே கேட்டு வந்தார்.

இப்படி இருக்கும் போது சிங்கள இராணுவத்திற்கு எதிராக புலிகள், தினமும் தாக்குதல்களை மேற்கொண்டபடி இருந்தனர். ஆனால் மற்றைய இயக்கங்கள் பெயருக்கு ஆயுதங்களுடன் மக்கள் மத்தியில் உலா வந்தனர். இதில் TELO மட்டுமே ஓரிரு தாக்குதல்கள் செய்துள்ளார்கள். ஏனைய அமைப்பினர் பெயருக்கு பந்தா காட்டுவதோடு முகாமில் முடங்கி இருந்தனர்.

அத்தோடு களவு, பாலியல் வல்லுறவு, கொலைகலிலும் ஈடுபட்டனர். பல ஆயுதக்குழுக்கள் இருந்தமையால், இதை யார் செய்தார்கள் என்ற குழப்பமும் மக்களுக்கு எழுந்தது. அத்தோடு ஒவ்வொரு இயக்கத்திலும் மாறி.மாறி போராளிகளையும் கொலை செய்து கொண்டிருந்தனர். இதனால் உண்மையாகவே போராடப்புறப்பட்ட போராளிகளும் பிழையான தலைமையின் வழிகாட்டல்களால் திசை மாறிப்போயினர்.

இப்படி ஆண்டுகள் கடந்த போது இந்திய அரசிற்கு, சிங்கள அரசை பணியவைப்பதற்கு புலிகள் தடையாக இருந்தனர். அதனால் TELO மூலமாக புலிகளை பலமிழக்க செய்யும் திட்டம் ஒன்றை போடுகின்றனர். இதற்கு பின்னால் இந்திய அரசே இருந்து செயல்பட்டது. அதன் ஆரம்பமாக தீவுப்பகுதியில் வைத்தும் அராலி,வட்டுகோட்டை பகுதியிலும் சில புலி உறுப்பினர்கள் இவர்களால் கொல்லப்பட்டனர்.

சமகாலத்தில் TELO வின் செயல் பாட்டில் சந்தேகம் கொண்ட புலிகள் TELO அமைப்பில் இருந்த கோணேஸ் என்பவர் மூலமாக தகவல் சேகரித்தனர். (மேஜர். கோணேஸ். இவர் 1991ம் ஆண்டு ஆணையிறவு முகாம் தகர்ப்பின் போது லெப்.கேணல்.சராண்ணை. மேஜர். குகதாசண்ணை போன்றோருடன் கவசவாகனத்தில் சென்று தாக்குதல் மேற்கொண்டு வீரச்சவடைந்தவர்) இவரது அண்ணன் புலிகலமைப்பில் இருந்தவர். புலிகளின் உளவுத்துறைக்காக வேலை செய்து கொண்டிருந்த கோணேஸ் மூலமாக தொடர்ந்து தகவல் வந்துகொண்டிருந்தது. இது அந்த அமைப்பை சேர்ந்தவர்களுக்கு தெரியாது. அப்போது இவர்கள் ரகசியமாக புலிகள் மீதான தாக்குதலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அதன் முதல் கட்டமாக புலிகளின் இரண்டு உறுப்பினர்களை கடத்தினர். இவர்களை மீட்பதற்கா, பேச்சுவார்த்தைக்கு, நிராயுதபாணியாக சென்ற புலிகளின் மூத்த உறுப்பினர் கப்டன். லிங்கமண்ணையை அந்த இரு போராளிகளுடனும் சேர்த்து TELO அமைப்பினர் கொலை செய்தனர்.

அதுவரை பொறுத்து போய்க்கொண்டிருந்த புலிகள், தம்மை அழிக்க ஆயத்தம் செய்கின்றார்கள் என்பதை தமது உளவாளியான மேஜர்.கோணேஸ் மூலமாக தகவலறிந்து, அவர்களுக்கு முன் புலிகள் முந்தினர். அப்போது பழைய பூங்காவில் இருந்த TELO முகாம் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அவர்களின் தலைமைக்காரியாலயம் அப்போது கல்வியங்காட்டில் இருந்தது.

முதலாவது தாக்குதலின் பின் உயிர் சேதத்தை தவிர்ப்பதற்காக எல்லா இடங்களிலும் ஒலிபெருக்கி மூலமாக TELO அமைப்பினரை சரணடையும் படி கூறப்பட்டது. பலர் நூறு பேர் சரணடைந்தனர். சிலர் புலிகளுக்கு எதிராக தாக்குதல் மேற்கொண்டனர். அவர்களுக்கு எதிராக புலிகளின் துப்பாக்கியும் நீண்டது. அன்று அவர்களே கொல்லப்பட்டனர். அந்த சண்டையில் இவர்கள் கூறியது போல ஆயிரகணக்கில் கொல்லப்படவில்லை. 90பேர் வரையே கொல்லப்பட்டிருந்தனர்.

இதை நான் நியாயப்படுத்தவில்லை. அந்த இளைஞர்கள் மேல் நான் கரிசனை கொள்கின்றேன். பிழையான தலைமையால், பிழையாக வழி நடத்தப்பட்டிருந்தார்கள். சண்டை ஆரம்பமானவுடன் லெப். கேணல்.திலீபண்ணை தலைமையில் ஒரு அணியினர் கல்வியங்காட்டில் வைத்து TELO அமைப்பின் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் சுற்றி வளைக்கப்பட்டார். அப்போது இவர்களிடமிருந்து தப்பும் நோக்கில் புகையிலை தோட்டமொன்றினுள் பதுங்கி இருந்தார்.

அப்போது தேடுதல் மேற்கொண்டிருந்த புலிகளின் போராளியான மேஜர். டொச்சண்ணை இவரை கண்டு விட்டார். அப்போது ஸ்ரீசபாரத்தினம், டொச்சண்ணையை சுட எத்தனித்த போது, டொச்சண்ணை முந்திவிட்டார். அன்று ஸ்ரீசபாரத்தினம் கொல்லப்பட்டதும் இந்த மோதல் முடிவுக்கு வந்தது. இந்திய அரசின் சொல்லைக்கேட்டு TELO ஆரம்பித்ததை புலிகள் முடித்து வைத்தனர். இது தான் அன்று நடந்த உண்மை.

அது போலவே, TELO வின் நடவடிக்கை வெற்றி அழிக்காமையால், தங்கள் அடுத்த வளர்ப்பான EPRLF அமைப்பினரை, புலிகள் மீது ஏவி விட்டனர். அதுவரை இவர்களை தடை செய்யும் முடிவை புலிகள் எடுத்திருக்கவில்லை. ஆனால் மன்னாரில் வைத்து EPRLF உறுப்பினர்களிடமிருந்து ஒரு வரைபடத்துடன் கூடிய கடிதமொன்று கிடைத்தது. அதில் குறிப்பிட்ட நாளில் புலிகளின் முகாமை தாக்கும் படி விவரிக்கப்பட்டிருந்தது.

இதிலும் உடனே புலிகளே முந்தினர். TELO,EPRLF இரண்டு அமைப்பின் மீதான ஒப்ரேசனை கிட்டண்ணையே செய்திருந்தார். இதில் EPRLF மீது உடனேயே தாக்குதல் மேற்கொள்ளாமல், அவர்களின் முகாம்களை நோக்கி சத்தவெடி வைக்கப்பட்டது. அடுத்தநாள் எல்லோரையும் வந்து சரணடையும் படி ஒலிபெருக்கியில் அறிவித்தனர். அதன் படி எல்லோரும் எந்த எதிர்ப்பும் இல்லாது வந்து சரணடைந்தனர்.

விசாரணையின் பின் எல்லோரும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். இப்படி அனுமதிக்கப்பட்டவர்கள் தான் பின்பு இந்திய இராணுவத்துடன் வந்து கொள்ளை, பாலியல் வல்லுறவுகள், கொலைகள் என பெரும் அழிவுகளை எம் மக்களுக்கு ஏற்படுத்தி இருந்தனர்.

இதோடு EROS அமைப்பு அதன் தலைவர் பாலகுமார் அண்ணையுடன் புலிகளமைப்பில் இணைந்தனர். மற்றைய குழுக்கள் தாமாகவே நாட்டை விட்டுச்சென்றனர். அத்தோடு தமிழர் தேசமெங்கும் ஒரு அமைப்பாக விடுதலைப்புலிகள் மட்டுமே இருந்தனர். அதுவரை பல குழுக்களாக பிரிந்திருந்த தமிழ் இளைஞர்கள் தலைவரின் கீழ் அணிதிரண்டனர்.

இந்த சதிகளின் பின்னால் இருந்த இந்திய அரசின் சூழ்ச்சியை அன்றே புலிகள் மோப்பம் பிடித்திருந்தமையால் அன்று எமது போராட்டம் காக்கப்பட்டது. அத்தோடு மற்றைய அமைப்புகளை தடை செய்த போதும், எதிரியுடன் மோதலில் கொல்லப்பட்ட ஏனைய போராளிகளையும் மாவீரர் பட்டியலில் புலிகள் இணைத்தனர். இந்த சம்பவம் ஏனையோரையும் புலிகள் மதித்து நடந்தமையை காட்டுகின்றது. இது தான் அன்று நடந்தது.

தாயகம், தமிழ்நாட்டு, புலம் பெயர்ந்து வாழும் இளையோர்களே பல உண்மைக்கு புறம்பான கதைகளை புனைந்து புலிகள் மீது பழி போடவென்றே பலர் (2009 க்கு பின்) கிளம்பி இருக்கின்றார்கள். அவர்கள் மேல் மிகவும் அவதானமாக இருக்கவும்.!

**துரோணர்**

# வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்பட வேண்டுமாயின் தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு குடையின் கீழ் செயற்பட வேண்டும்



இன்றைய சூழ்நிலையிலே தமிழ் மக்களுக்காக ஒரு தீர்வு திட்டம் என்று பார்க்கின்ற பொழுது காலத்திற்கு காலம் மாறி மாறி வந்த அரசாங்கங்களின் நிலைபாட்டின் படி ஒரு இனவாத.மதவாத அரசியலை மேற்கொண்டதன் நிமித்தம் இன்று தொடர்ந்தும் அந்நிய நாடுகளின் சக்திகள் நாட்டுக்குள் ஊடுவிரு இந்த நாட்டினுடைய புலனாய்விற்கு ஒரு கேள்வி குறியாக தற்பொழுது அமையப்பெற்றிருக்கின்றது என்பது தான் மிக முக்கியமான விடயமாக இருக்கின்றது. இந்த நாட்டினுடைய புலனாய்வு கட்டமைப்பு கேள்வி குறியாக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலையிலே அந்நிய நாடுகளுடைய போக்குவரத்துக்கள் அதாவது கடல் மார்க்கம்.ஆகாயமார்க்கம். தரை மார்க்கமான போக்குவரத்துக்கள் எல்லாம் தற்பொழுது அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இவ்வாறு அதிகரித்துக்கொண்டு செல்வதற்கு இதனை தடுத்து நிறுத்துவதற்கு அல்லது இதனை எவ்வாறு ஒரு ராஜதந்திர ரீதியாக கையாளவேண்டும் என்று பார்க்கின்ற பொழுது அதனை கையாளாது குறித்த நாடுகளுடன் ஒரு ஒத்த அரசியலை செய்கின்ற ஒரு நடவடிக்கையே தற்பொழுது இருக்க கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களும் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பது தான் இன்றைய நிதர்சனமான உண்மையாக இருக்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கின்ற பொழுது 90நாட்கள் நடந்த அரகல போராட்டம் என்பது அதிலே நடைபெற்ற சில சம்பவங்களை நாங்கள் பார்க்க இருக்கின்றது. வடக்குகிழக்கு இணைந்த ஒரு தமிழா் தாயகத்தை தமிழ் மக்களுக்கு ஒப்படைக்க கூடாது என்பதில் குறியான அரசியலை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த அரகல போராட்டமானது சிங்கள மக்கள் தமக்கான ஒரு பொருளாதார நெருக்கடி வருகின்ற பொழுது தாங்கள் அழிவடைந்து போகப்போகின்றோம் என்ற நிலை வருகின்ற பொழுது தமிழ் . முஸ்லீம் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள் இந்த அறைகூவலின் அடிப்படையிலே ஒரு சில தமிழ் தரப்பும் அந்த போராட்டத்திற்கு ஆதரவாக செயற்படுகின்றது.

இந்த போராட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த காலக்கட்டத்திலே தற்பொழுது இருக்க கூடிய ஜனாதிபதி மூன்று விடயங்களை முக்கியாக செய்தார். ஜனாதிபதியை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு முன்னா் மக்கள் போராட்டத்தின் மூலமாக அவரை வெளியேற்றும் ராஜதந்திரத்தை கையாண்டார். அப்பொழுது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு எதிர்ப்பை கூட மக்களுக்குடைய அரகல போராட்டத்தை ஆதரித்தாரே தவிர அதனை எதிர்கவில்லை. சூட்சமாக செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கடைசியில் அவர்களது சொந்த வீடும் தீக்கரையாக்கப்பட்டது. அந்த மூன்று விடயங்கள் பற்றி பார்க்கின்ற பொழுது பசில் ராஜபக்ஷ அவர்கள் நிதி அமைச்சராக இருந்த பொழுது அவருடைய பதவிகளை பறித்து அதிலிருந்து விலகுமாறு செய்தார். பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ அவர்களை விலகும்படி பணித்தார். பின்னா் கோட்டபாய ராஜபக்ஷ அவர்களை பதவியிலிருந்து அடியோடு நசுக்கி விடடார். அவா் இந்த மூன்று விடயத்தையும் செய்யும் போது அவர் பாராளுமன்றம் வந்தார். பிரதமர் ஆனர் பின்னர் பதில் ஜனாதிபதி ஆனர் அதன் பின்னர் ஜனாதிபதி ஆகின்றார்.

ஆகவே இந்த அரசியலுடைய காய்நகர்த்தல்கள் என்பது தமது ஆட்சிபலத்தை ஆட்சியை தக்கவைத்து கொள்கின்ற ஒரு நடவடிக்கையாகவே அமைப் பெற்றிருக்கின்றது. தவிர இது வடகிழக்கு இணைந்த தமிழருடைய பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காகவோ அல்லது நாட்டினுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்குரிய முன் நடவடிக்கையாகவோ தென்படவில்லை என்பது இன்றைய ஆய்வாளர்களுடைய கருத்தாடலாக இருக்கின்றது.

ஆசியபசுபிக் பிராந்தியத்திலே இருக்க கூடிய வல்லரசு நாடுகள் இலங்கை தேசத்தை ஆக்கிரமித்து இந்த இலங்கை தேசத்தை ஆக்கிரமிப்பதன் ஊடாக தமது வளங்களை பலப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கைகளையே அவர்கள் செய்து வருகின்றார்கள். இன்று இந்தியா இலங்கைக்கு உதவி செய்தால் அது அமெரிக்கா சீனாவுக்கோ பிடிக்காத நிலை ஏற்ப்பட்டிருக்கின்றது.

அன்றைய காலக்கட்டத்திலே தமிழீழ விடுதலைப்புலிகள் உச்சக்கட்ட பலத்துடன் நாட்டில் இருந்த பொழுது சா்வதேச ரீதியாக எந்த ஆயுத கப்பலும் அல்லது ஆகாய மார்க்கமாக நவீன விமானங்களோ செல்ல முடியாத நிலையே தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்ப்படுத்தி இருந்தார்கள். இன்று உக்ரைனில் பயன்படுத்தபடுகின்ற விமான எதிர்ப்பு ஏவகணையை அன்று தமிழீழ விடுதலைப்புலிகள பயன்படுத்தி இருந்தார்கள். ஆனாலும் செயற்படுத்தப்பட்ட காலப்பகுதியிலே அவர்கள் சரியான ஒரு இலக்கை அடையமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டமைக்கு காரணம் என்னவென்றால் சில சந்தா்ப்பங்கள் சூழ்நிலைகள் எல்லாம் அந்நிய நாடுகளினுடைய சக்திகள் இதற்குள் ஊடுருவி தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் அப்பொழுது தான் தமக்கான ஒரு நிலைப்பாட்டை முன்னெடுக்கலாம் என்ற ஒரு நிலையை கொண்டு வந்தார்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் சீனா தனது வர்த்தக வளர்த்தெடுக்கவும் இந்தியா தனது வர்த்தகத்தை வளர்த்தெடுக்கவும் இந்த இலங்கையை பயன்படுத்தி கொண்டிருக்கின்றார்கள். தவிர அவர்கள் மூலமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எல்லாம் தோல்வியில் முடிவுபெற்றுள்ளன. கடல் மார்க்கமான இலங்கையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலே கொழும்பில் போர்ட்சிற்றி என்னும் பெயரிலே தன்னகப்படுத்தியுள்ளது சீனா. அது போன்று இந்தியாவை பொறுத்த வரையிலே திருகோணமலையை தன்வசப்படுத்தி இருக்கின்றது. ஆகாய மார்க்கமாக அமெரிக்கா இலங்கையை தன் வசப்படுத்தி இருக்கின்றது. ஆகவே இந்த மூன்று நாடுகளும் ஏதோ ஒரு அடிப்படையில் இங்கு தனது நிலைமைகளை இங்கு மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆகவே இந்த காலத்தின் தேவை கருதி சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை தமிழ் தரப்பிற்கு இருக்கின்றது என்பதே இன்றைய அரசியலின் மிக முக்கியமான விடயமாகும். இந்த வடக்குகிழக்கு இணைய வேண்டும் அல்லது இணைக்கப்பட வேண்டும் என்ற விடயத்திற்கு அப்பால் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை எவ்வாறு கொண்டு சென்று இலங்கை அரசை அடிப்பணிய வைத்து அதனூடாக இந்த வடகிழக்கு இணைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடான நடவடிக்கையை தான் இந்த தமிழ் தரப்பு இனிவரும் காலங்களிலே செய்ய வேண்டும். அன்று 22பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள். இன்று 10பாராளுமன்ற உறுப்பினர்களாக உருமாறியிருப்பதற்கு என்ன காரணம் என்பதை கண்டறிந்து அதற்கான வியூகங்களை வகித்து அந்த 22பாராளுமன்ற உறுப்பினர்களையும் மீளவும் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதன் ஊடாகவே இந்த அரசியல் காய்நகர்த்தல்களை நகர்த்தி கொண்டு செல்ல முடியும்.

ஆகவே இந்த 22பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற பொழுது அவர்களுடைய பலம் பாரிய பலமாக இருந்தது. ஆகவே அதனை தீர்மானிக்கின்ற ஒரு சக்தியாக நாம் செயற்படுவதற்கு மிக மூலக்காரணங்களாக அமைந்திருந்தன. தொடா்ந்தும் நாம் இவ்வாறு செயற்படுவதற்கான நகா்வுகளை இதனூடாக நகா்த்த வேண்டும். அதற்காக அனைத்து தமிழ் தரப்பும் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் போராட்டங்களை அகிம்சை ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாகவே இந்த அரசாங்கத்தினுடைய தடைகளை உடைத்தெறிந்து அதற்கான ஒரு போராட்டத்தினுடைய போக்கை கொண்டு செல்ல முடியும் என்பது இன்றைய கால சூழ்நிலையாக இருக்கின்றது. இந்த இனப்படுகொலைக்கான தீர்வை காண வேண்டும். என்ற நிலைக்கு எல்லாம் நாம் ஒற்றுமையாக செயற்ப்படுவதன் மூலமே நகர்த்தி செல்ல முடியும்.

இன்று தேசிய மக்கள் முன்னனி ஒரு வழியிலும் தமிழரசு கட்சி ஒரு வழியிலும் ரெலோ.புளெட் இன்னொரு திசையிலும் செல்லுகின்ற பொழுது இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய ஒற்றுமை அதாவது இவ்வாறு எல்லாம் வேறு வேறு திசைக்கு செல்லுகின்ற போது தமிழ் மக்களுக்கான தீர்வை எட்டிப்பிடிக்க முடியாத ஒரு சூழல் தான் உருவாகின்றது. தேசிய ரீதியாக எமது ஒற்றுமையை பலப்படுத்துவதனூடாக அரசியல் காய்நகா்வுகளை நாம் நகா்த்தி கொண்டு செல்ல முடியும் என்பது இன்றைய அரசியல் சூழல் எமக்கு உணர்த்தி தந்த பாடமாக இருக்கின்றது. இன்று தமிழ் மக்கள் போராட்டங்களை வெவ்வேறு வடிவங்களில் நடத்தி வந்தாலும் கூட அரகலபோராட்டத்தை நடத்த முடியாத ஒரு சூழல் இருக்கின்றது. எனென்றால் இன்று சிங்கள மக்களுடைய வீடுகள் அரசியல் தலைவர்களது வீடுகள் பத்தவைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமன்றி ஜனாதிபதி செயலகம் முற்றுகை அது போன்று பாராளுமன்றத்தை முற்றுகையிட்டனர். இப்படியெல்லாம் நடக்கின்ற பொழுது பார்த்துக்கொண்டிருந்த சிங்கள தேசம் தமிழ் தரப்புக்கான ஒரு போராட்டத்தை காலி முகத்திடலில் ஏற்படுத்தி இருந்தால். அவர்கள் அனைவரையும் கைது செய்து அல்லது பிணக்குவியலாக குவித்திருப்பார்கள். அது தான் கடந்த காலத்திலே நடந்திருந்தது.

ஆகவே எது எவ்வாறாக இருப்பினும் தமிழ் தரப்பினுடைய ஒருங்கிணைவு என்பது இந்த அரசியல் நகர்த்தி செல்வதற்கும் தமிழா்களுக்கான தீர்வை வென்றெடுப்பதற்கும் மிக முக்கியமாக அமையப்பெறுகின்றது. பூகோள ரீதியாக வென்றெடுப்பதற்கு தமிழ் தரப்புக்கள் ஒரு குடையின் கீழ் செயற்பட வேண்டும்.

**இரணியன்**



# பிராந்திய செய்திகள்



## எட்டு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை

எட்டு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை இன்னும் நடைமுறையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




கொழும்பு, களுத்துறை, கண் டி, மாத்தளை, நுவரெலியா, காலி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு வி டுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை அன்று (02) பிற்பகல் 3 மணி வரை அமுலில் இருக்கும் என தே சிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை விழிப்புடன் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக களுகங்கை, ஜின் மற்றும் நில்வலா ஆறுகளின் கரையோரங்களில் உள்ள தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என நீர்ப்பாசன திணைக்களம் எச்சரித்துள்ளது.

கனமழை காரணமாக குறுகிய காலத்தில் ஆறுகளின் நீர்மட்டம் உயரும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

## புத்தளத்தில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்!

புத்தளம் வைத்தியசாலை வரலாற்றில் முதல் தடவையாக பெண் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

24 வயதுடைய இளம் தாய் ஒருவரே இந்தக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளதாக புத்தளம் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சுமித் என்டன் பெர்னாண்டோ" தெரிவித்தார்.

ஒரு ஆண் குழந்தையும் மற்றும் மூன்று பெண் குழந்தைகளும் இவ்வாறு பிறந்துள்ளன.

தற்போது, குறித்த நான்கு குழந்தைகளும் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நி புணர் வைத்தியர் சுரின் ஜெயவர்தன அவர்களின் மேற்பார்வையில் பாதுகாப்பாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## லிட்ரோ எரிவாயு விலை மீண்டும் குறைகிறது

எதிர்வரும் திங்கட் கி ழமை (05) நள்ளிரவு முதல் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய விலைகள் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தகவல் அறியும் உரிமைக்கு புதிய அணுகுமுறை

அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக புதிய அணுகுமுறையொன்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகவல் பெறுவதற்காக விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் போது முகவரியுடன், தொலைபேசி இலக்கம், வட்ஸ்அப் இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடுமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, விண்ணப்பதாரிகளைக் கோரியுள்ளது. கடிதங்கள் மூலம் கோரப்படும் தகவல்களை அனுப்புவதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கிடையில் அன்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. பொதுமக்களின் வசதிக்காக செயற்படுவது அனைத்து அமைச்சுக்களினதும் அரச அதிகாரிகளினதும் தலையாய பொறுப்பாகும்.

எனவே எந்தவொரு நபருக்கும் இடையூறு ஏற்படாத வகையில், செயல் திறன்மிக்க சேவையை வழங்க வேண்டும். இதன் மூலம் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் முறையான பதில் அளிக்கும் வேலைத்திட்டத்தை உருவாக்குவது கட்டாயம் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். மேலும், ஜனாதிபதி செயலகத்திடம் இருந்து தகவல்களைக் கோரும் போதும் இந்த செயல்முறையைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்) சிசிர ஹேனாதிர, தகவல் அதிகாரியாக செயற்பட்டு வருகின்றார். அத்துடன் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்சன ஜயவர்தன பதில் அதிகாரியாக செயற்படுகின்றார். பின்வரும் இலக்கங்கள் ஊடாக தகவல் அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம்.

சிசிர ஹேனாதீர - ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்)
கைபேசி இலக்கம் - 0718132590
அலுவலக இலக்கம் - 0112354329 / 0112354354

கலாநிதி சுலக்சன ஜயவர்தன - ஜனாதிபதியின் மேலதிக செயலாளர்
கைபேசி இலக்கம் - 0719994133 / 0711992354
அலுவலக இலக்கம் - 0112354329 / 0112354354
மின்னஞ்சல் முகவரி - addlsec.fsd@presidentsoffice.lk

## 120 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

நாட்டில் 120 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

14 உயிர்காக்கும் மருந்துகளின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ தொழில்நுட்ப சேவைகளின் இயக்குநர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இந்த நாட்களில் Contact lens மற்றும் செவிப்புலன் கருவிகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட உபகரணங்களின் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



## தந்தையை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்த மகன்!

இரத்மலானை பிரதேசத்தில் தந்தையை இரும்புக் கம்பியால் தாக்கி மகன் கொலை செய்துள்ளார்.

தாய் மற்றும் தந்தையுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக சந்தேகநபரான மகன் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

70 வயதுடைய த ந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் தாயும் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த த ந்தை சுமார் இரண்டு வருடங்களாக சுயநினைவின்றி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான மகன் கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## தேயிலை தோட்டங்களுக்கு உர விநியோகம் ஆரம்பம்

தேயிலை பயிர்ச்செய்கைக்கான யூரியா மற்றும் ஏனைய உரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறு தேயிலை தோட்ட சங்கங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் ஊடாக உரங்கள் விநியோகிக்கப்படுவதாக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துஷார பிரியதர்சன தெரிவித்துள்ளார்.

உரம் பெறுவதில் சிக்கல் இருப்பின் 1974 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு தலைவர் தெரிவித்தார்.





# சினிமா துளிகள்



## நடிப்பில் இருந்து விலகும் நடிகை நயன்தாரா...?



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக இருப்பவர் நடிகை நயன்தாரா.

இவர் கடந்த ஜூன் 9ஆம் திகதி இயக்குனர் விக்னேஷ் சிவனை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

இவர்கள் இருவரும் தற்போது இரண்டு ஹனிமூன் சென்றுள்ளனர். இந்நிலையில். நடிகை நயன்தாரா தற்போது ஒப்பந்தம் செய்திருக்கும் படங்களை நடித்து முடித்துவிட்டு. நடிப்பில் இருந்து விலகப்போவதாக அதிர்ச்சியளிக்கும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

நடிப்பிற்கு முற்றுப்புள்ளி

இதற்க்கு காரணம் நயன்தாராவின் குடும்பத்தினர் படப்பிடிப்பின் போது தாலியை கழட்ட வேண்டாம் என்று கூறியுள்ளார்களாம்.

இதனால். தற்போது நயன்தாரா நடித்து வரும் படங்களில் கூட அவர் தாலியை கழட்டாமல் தான் நடித்து வருகிறாராம்.

பல விதமான கதாபாத்திரங்களில் நடிக்கும்போது கண்டிப்பாக தாலியை கழற்றி வைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதினால். நடிகை நயன்தாரா நடிப்பில் இருந்து விலக முடிவு செய்துள்ளாராம்.

இதன்பின் தன்னுடைய ரவுடி பிக்சர்ஸ் நிறுவனத்தை நயன்தாரா கவித்துக்கொள்ள முடிவு செய்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## பிரபல தயாரிப்பாளரை திருமணம் செய்து கொண்ட சீரியல் நடிகை மஹாலக்ஷ்மி !

சின்னத்திரையில் மிகவும் பிரபலமான சீரியல் நடிகையாக திகழ்ந்து வந்தவர் நடிகை மஹாலக்ஷ்மி.

இவர் சன் டிவி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான வாணி ராணி சீரியலின் மூலம் பெரியளவில் பிரபலமானார்.

மேலும் குறிப்பிட்டு சொல்லும் வகையில் Office, ஒரு கை ஒசை உள்ளிட்ட முக்கிய சீரியல்களில் இவர் நடித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் சினிமாவின் பிரபல தயாரிப்பு நிறுவனமான டுஜடீசுயு புரோடக்ஷன்ஸ்-ன் உரிமையாளர் LIBRA ரவி மற்றும் நடிகை மஹாலக்ஷ்மி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

மேலும் தற்போது அவர்கள் இருவருக்கும் திருமண வாழ்த்துகளை தெரிவித்து பலரும் பதிவிட்டு வருகின்றனர்.





## இரண்டு நாளில் கோப்ரா திரைப்படம் உலகம் முழுவதும் செய்துள்ள வசூல்

**கோப்ரா**

அஜய் ஞானமுத்து இயக்கத்தில் விக்ரம் நடித்து கடந்த 31ஆம் திகதி திரைக்கு வந்த படம் கோப்ரா.

விக்ரமுடன் இணைந்து ஸ்ரீநிதி ஷெட்டி. மிர்னாலினி ரவி. மீனாட்சி. இ.்.பார்ன் பதான் ஆகியோர் நடித்திருந்தனர்.

**பாக்ஸ் ஆபிஸ்**

கலவையான விமர்சனங்களை பெற்று வந்த கோப்ரா முதல் நாள் முடிவில் உலகம் முழுவதும் சுமார் ரூ. 20 கோடி வரை வசூல் செய்திருந்தது.

படத்தின் நீளம் கடும் விமர்சனங்களுக்கு உள்ளன நிலையில். படத்திலிருந்து 20 நிமிடம் நீக்கப்பட்டுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தனர்.

இந்நிலையில். தற்போது இரண்டு நாட்கள் முடிவில் உலகம் முழுவதும் பாக்ஸ் ஆபிசில் ரூ. 30 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது.








## விஜய்யின் வாரிசு படத்தின் ஃபஸ்ட் சிங்கிள் ரிலீஸ் திகதி இதுதானா?

விஜய்யின் வாரிசு திரைப்படத்திற்காக தளபதி ரசிகர்கள் வெயிட்டிங். இப்படம் கண்டிப்பாக பாக்ஸ் ஆபிஸில் பெரிய சாதனை படைக்கும் என்பது ரசிகர்களின் கருத்தாக இருக்கிறது.அண்மையில் விஜய் ஹைதராபாத் சென்றுள்ளார். அந்த தகவல் நடிகை வரலட்சுமி மூலமாக நமக்கு தெரிந்தது. தற்போது ஹைதராபாத்தில் படு வேகமாக வாரிசு திரைப்பட படப்பிடிப்பு நடந்து வருகிறது. அடுத்தக்கட்ட படப்பிடிப்பிற்காக படக்குழு சென்னை அக்டோபர் மாதம் வருகிறார்களாம். சென்னையில் நடக்கும் படப்பிடிப்பு தான் இறுதிக்கட்ட படப்பிடிப்பாக இருக்குமாம்.

இதுவரை படத்தின் ஃபஸ்ட் லுக் போஸ்டர்கள் மட்டுமே வெளியாகி இருந்தது. தற்போது அடுத்த அப்டேட் குறித்து தகவல் வந்துள்ளது. அதாவது படத்தின் ஃபஸ்ட் சிங்கிள் வரும் தீபாவளி ஸ்பெஷலாக வெளியாகும் என்கின்றனர்.

**02 ஆம் பக்க தொடர்ச்சி...**

லெனினின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று சதா சிந்தித்துக்கொண்டிருந்த சிட்னி ரெய்லிக்கு, MUCR என்ற புரட்சிகர அமைப்பின் ஐரோப்பிய வருகை பற்றிய செய்தி இனிப்பாகக் கிடைத்தது. அந்த அமைப்பைத் தொடர்புகொண்டு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

மிகவும் சந்தோஷம் என்று அவரை கைகுலுக்கி வரவேற்றது MUCR இனது ஐரோப்பியப் பிரிவு. MUCR என்ற பெயரில் ரஷ்யாவின் கே.ஜீ.பி. உறுப்பினர்கள்தான் அங்கு வந்திருக்கின்றார்கள் என்று சிட்னி ரெய்லிக்குத் தெரியாது. தானாகவே சென்று வலையில் வீழ்ந்தார். லெனினின் ஆட்சியை எப்படி வீழ்த்தலாம் என்று அவர்களுடன் சேர்ந்து நுணுக்கமாகத் திட்டம் தீட்டினார்.

ஆனால், இங்கே லண்டனில் அமர்ந்து கொண்டு லெனினை வீழ்த்துவது எப்படி? ரஷ்யாவில் ஆட்சி தான் அமைப்பது எப்படி? அதற்கு ரஷ்யாவிற்கு நேரில் போக வேண்டும் அல்லவா? 'ரஷ்யாவில் மிகவும் பலமாகச் செயற்படும் எங்களது உறுப்பினர்களூடாக உங்கள் இரகசியப் பயணத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்' என்றது MUCR இனது ஐரோப்பியப் பிரிவு. 'நீங்களே நேரடியாகச் சென்று ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் பற்றி விளக்கிச்சொன்னால் அங்குள்ள எங்கள் உறுப்பினர்களுக்குத் தெம்பாக இருக்கும்.. மேலும் உற்சாகமாகச் செயற்படுவார்கள்..' சிட்னி ரெய்லிக்கு ஐடியா கொடுத்தார்கள் MUCR இனது ஐரோப்பியப் பிரிவு.

ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு என்று மிகவும் இரகசியமாகப் புறப்பட்ட சிட்னி ரெய்லி, ரஷ்யாவில் பகிரங்கமாகக் கைது செய்யப்பட்டார். அவரை ரஷ்யாவிற்கு இரகசியமாக அழைத்துச் சென்ற கே.ஜீ.பி. உறுப்பினர்களே, ரஷ்ய எல்லையை அடைந்ததும் அவரைக் கைதுசெய்தார்கள். சித்திரவதைகள், விசாரணை, துப்பாக்கிச்சூடு என்று மிகவும் சோகமாக முடிவடைந்தது பிரபல்யமான, திறமையான ஒரு வீரனின் வாழ்க்கை.

அதுமாத்திரமல்ல, இவர் போன்று புலம்பெயர்ந்த நாடுகளில் ரஷ்ய ஆட்சிக்கு எதிராகச் செயட்பட்டுக் கொண்டிருந்த பல புரட்சியாளர்கள், தேசப்பற்றாளர்கள், தேசியவாதிகள் ஏமாற்றப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். காணாமல் போனார்கள், கடத்தப்பட்டார்கள். செயலிழக்கவைக்கப்பட்டார்கள்.

இதுதான் "Operation Trust' என்ற இராணுவ நடவடிக்கை. உலக அளவில் மிகவும் வெற்கரமான ஒரு உளவு நடவடிக்கை. உலக நாடுகளின் புலனாய்வுப் பிரிவினருக்கான ஒரு முக்கிய பாலர் பாடம்தான் 'Operation Trust' என்ற இந்த இராணுவ நடவடிக்கை.

இப்பொழுது உள்ள மிகப் பெரிய கேள்வி இதுதான்.

Operation Trust' போன்ற ஒரு உளவு நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளுகின்றதா?

கொஞ்சம் சிக்கலான கேள்விதான். ஆனாலும் புலம்பெயர் தமிழர்கள் பெரிதாக யோசித்தேயாகவேண்டிய கேள்வி. ஆம் மேற்கொள்ளப்படுகின்றது என்று உறுதியாகக் கூறுவதற்கு என்னிடம் போதியளவு ஆதாரம் கிடையாது. ஆனால் அப்படியான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பங்களும், சாத்தியங்களும் நிறையவே இருக்கின்றன என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

அந்தச் சாத்தியங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முள்ளிவாய்காலில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள், தளபதிகள், போராளிகள் என்று ஏராளமானவர்கள் 'கொத்தாக' சிறிலங்கா இராணுவத்தின் கரங்களில் கிடைத்தார்கள். அவர்களை முழுக்க முழுக்க சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் கையாண்டு வருகின்றார்கள். அப்படித் தமது கரங்களில் கிடைத்தவர்களை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பயன்படுத்தி வருகின்ற சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு, அவர்களை நிச்சயம் தமது புலனாய்வுத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வைத்திருக்கமாட்டார்கள்.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்து செயற்பாடுகளும் இலங்கையில் ஓரளவு முழுமையாகவே அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், விடுதலை புலிகள்வசம் இருந்த ஆயுதங்கள், அவற்றை இயக்கக்கூடியவர்கள் என்று அனைத்துமே சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில், புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள் தாம் சிறிலங்கா தேசத்தை கொஞ்சம் சங்கடத்தில் ஆழ்த்தும்படியாக இருந்து வருகின்றன. எனவே சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு தனது அத்தனை பலத்தையும் நிச்சயமாகப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துத்தான் திருப்பி விட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சரி, புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவு என்ன செய்யலாம்?

செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்கள், சமூகத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றவர்களை விலைபேசலாம். மிரட்டலாம்.

ஆனால் விலைபோகக்கூடியவர்கள் அனைவரும் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னரே விலைபோய்விட்டார்கள். சிங்களத்தின் மிரட்டல்களுக்கு கலங்கக்கூடியவர்கள் மீதும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவும் அதன் கூலிகளும் கைவைத்து நீண்ட நாட்களாகி விட்டன. இவை எதற்கும் அகப்படாமல் எஞ்சியிருப்பவர்கள்தான் சிங்களத்திற்கு தற்பொழுது பிரச்சனை. எதற்கும் அஞ்சாமல், எதற்கும் விலைபோகாமல் புலம்பெயர் தேசங்களில் ஓரமாக நின்றுகொண்டிருப்பவர்கள் பற்றித்தான் சிறிலங்கா கொஞ்சம் சிந்திக்கின்றது. கவனமெடுக்கின்றது.

எதற்கும் அடிப்பணியாமல் வீரமாக புலம்பெயர் தேசங்களில் நின்று போராடும் அப்படிப்பட்ட மறத் தமிழர்களை என்னசெய்யலாம்?

இது பற்றிப் பார்ப்பதானால், சுமார் ஒன்றரை வருடங்கள் நாம் பின்நோக்கிச் செல்லவேண்டும். முள்ளிவாய்கால் முடிவினைத் தொடர்ந்து அப்பொழுது ஒரு பெரிய வெற்றிடம் காணப்பட்டது. புலிகளை தாம் முற்றாகவே அழித்து விட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது. தளபதிகள், போராளிகள், ஆதரவாளர்கள், மக்கள் என்று அனைவரையுமே சிறைக்குள் தள்ளிவிட்டு, தனது வெற்றியை பல நாட்கள் கொண்டாடியது சிங்களத் தலைமை. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் தமது வெற்றிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சில ஆபத்துக்கள் இலங்கையில் பரவலாக மறைந்து இருந்ததை சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு உணர்ந்தது. அதாவது, வடக்கு கிழக்கு, மற்றும் தென் இலங்கைக் காடுகளில் ஆயுதங்களுடன் புலிகளின் சிறிய சிறிய அணிகள் நிலைகொண்டிருந்தன.

அதேபோன்று கொழும்பிலும், தென் இலங்கையிலும், புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மக்களோடு மக்களாக கலந்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். உத்தரவு கிடைத்ததும் செயற்படுவதற்கென்று ஏராளமான தற்கொலைப் போராளிகளும் பல இடங்களிலும் மறைந்திருந்தார்கள். புலிகள் மீதான வெற்றி என்று கொண்டாடிக்கொண்டிருந்த சிங்களத்திற்கு, இந்த விடயம் ஒரு பெரிய அச்சுறுத்தலாகவே இருந்தது.

வடக்கு கிழக்கில் உள்ள காடுகளிலும், தென் இலங்கை மற்றும் தலைநகர் கொழும்பிலும் பயங்கர ஆயுதங்களுடன் மறைந்திருக்கும் நூற்றிற்கும் அதிகமான விடுதலைப் புலி உறுப்பினர்களை கண்டுபிடிக்கவேண்டும். அழிக்கவேண்டும். இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு, ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த நடவடிக்கை கிட்டத்தட்ட 'Operation Trust' உளவு நடவடிக்கையை ஒத்ததாகவே இருந்தது.

தம்மிடம் சரணடைந்த அல்லது தம்மால் கைதுசெய்யப்பட்ட சில விடுதலைப் புலி முக்கியஸ்தர்களை சித்திரவதை செய்து, அவர்களது மனைவி குழந்தைகளைப் பணயம் வைத்து, மிகவும் கவனமாக ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு. அதாவது, முள்ளிவாய்கால் நடவடிக்கையின் பொழுது சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்படாமல் சில தளபதிகள், ஒரு தொகுதி விடுதலைப் புலி உறுப்பினர்கள் தப்பித்து வன்னிக் காடுகளில் உள்ள நிலக்கீழ் சுரங்கங்களில் மறைந்திருந்து செயற்படுவது போன்ற ஒரு தோற்றப்பாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் ஏற்பாடு செய்த குழு, பல்வேறு இடங்களில் மறைந்திருந்த போராளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தாம் மீள ஒருங்கிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள். தம்மை அழித்த சிறிலங்காப் படையினரைப் பழிவாங்கவேண்டும் என்று சபதம் எடுத்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் புலம்பெயர் நாடுகளில் தேசியம் பேசிக்கொண்டிருந்த ஒரு தரப்பினரால் அவிழ்த்துவிடப்பட்ட கதைகளும், மாயைகளும் கூட, சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரின் இந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிதும் உதவவே செய்தன. 'அதோ அவர் அங்கே இருக்கின்றார். இதோ ஐயாயிரம் பேருடன் அந்த தளபதி வன்னியில் மறைந்திருக்கிறார்'.. ஷ புலிகள் வன்னியில் இன்று தாக்குதல்.. பல இராணுவத்தினர் காயம்.. ஆனால் செய்தியை சிறிலங்கா அரசாங்கம் மறைத்துவிட்டது.. வன்னியில் பல சிறிலங்கா படையினரைக் காணவில்லை.. இதுபோன்று புலம்பெயர் தமிழர்களில் ஒரு பிரிவினர் ஆர்வக்கோளாறினால் மேற்கொண்ட பிரச்சாரங்கள், சிறிலங்கா படையினர் மேற்கொண்ட அந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிய அளவில் கைகொடுத்தது.

மீள ஒருங்கிணைய முயன்றவர்கள் சிறிலங்காப் படையினரிடம் வசமாகவே மாட்டிக்கொண்டார்கள். பல கரும்புலிகள் கூட இந்த இரகசியச் சதி நடவடிக்கையின் பொழுது அகப்பட்டுக்கொண்டார்கள். பல ஆண்டுகள் கொழும்பிலும் அதன் சுற்றுவட்டத்திலும் இரகசியமாகச் செயற்பட்டு வந்த புலிகளின் பல உளவாளிகள் சிறிலங்காப் படையினரிடம் மிக இலகுவாகவே அகப்பட்டுக்கொண்டார்கள்.

சிறிலங்கா புலனாய்வாளர்களால் இயக்கப்பட்ட இந்த அணியினர் புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட முக்கிய செயற்பாட்டாளர்களையும் தொடர்புகொண்டு, பல்வேறு தகவல்களைப் பெற்றார்கள். பெருமளவு பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டு அதனைப் பெற்றார்கள். வெளிநாடுகளில் இருந்த செயற்பாட்டாளர்களுடன் இலங்கையில் தொடர்புகளில் இருந்த நபர்களையும் தமது இந்த நடவடிக்கையினூடாகக் கண்டுபிடித்தார்கள்.

இப்பொழுது மறுபடியும் பழைய கேள்விக்கு வருவோம்.

இதேவகையிலான நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளதா?

நிச்சயமாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ் தேசியத்தின் மீது புலம்பெயர் தமிழர்கள் கொண்டுள்ள வெறி; புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலம் என்பது உண்மையே. அதேவேளை இந்த வெறிதான் புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலவீனம் என்பதையும் நாம் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

'தமிழ் தேசியம்' என்று கூறிக்கொண்டு யாரும் எம்மை இலகுவாக ஏமாற்றிவிடும் அளவிற்கு இந்த வெறிக்கு நாம் அடிமையாகிக் கிடக்கின்றோம். பல வியாபாரிகள் தேசியம் பேசி எம்மை, எமது பொருளாதாரத்தை வளைத்துப் போடுவதை நாம் தெரிந்துகொண்டே அனுமதித்துக் கொண்டிருக்கின்றோம். தேசியத்தின் பெயரால்.

எனவே எமது மிகப் பெரிய பலமாக நாங்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றதேசியத்தின் மீதான எமது கண்மூடித்தனமான பற்று, மிதமிஞ்சிய வெறி -இவற்றினையே எமக்கு எதிரான தமது நகர்வுகளுக்கு எமது எதிரி பயன்படுத்த முனையும் சந்தர்ப்பம் இருக்கவே செய்கின்றது.

'இல்லை இல்லை.. அது ஒருபோதும் முடியாது..' என்று சிலர் கூறலாம்.

ஆனால் தாம் நேசிக்கின்ற தேசியத்தின் பெயரால் இன்று சில தேசியவாதிகள் தெருவில் நின்று சட்டையைக் கிழித்துக்கொண்டு அடிபடுவது எமது பலவீனத்திற்கு ஒரு சிறந்த உதாரணம்.

எம்மைவிட வேகமாக தமிழ் தேசியம் பேசிக்கொண்டு Operation Trust' உளவு நடவடிக்கை எம்மத்தியில் மேற் கொள்ளப்படக்கூடிதற்கான சாத்தியத்தை நாம் இலகுவாக உதறித்தள்ளிவிட முடியாது.

இந்தியாவில் புலிகள் மீள ஒருங்கிணைகின்றார்கள்; என்ற கதை எம்மவர்கள் மத்தியில் தற்பொழுது மிக வேகமாக பரவிக்கொண்டிருக்கின்றது. இந்தக் கதையின் தோற்றுவாய் எது என்று பார்த்தால் - சிறிலங்காவின் பாராளுமன்றத்தில்தான் இந்தக் கதை முதன் முதலில் அவிழ்த்து விடப்பட்டது. அதுவும்சிறிலங்காவின்பிரதமர்தான்இந்தக் கதையை பகிரங்கமாகத் தெரிவித்தார். அவர் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டித்தான் இந்தக் கதையைத் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பல விடுதலைப் புலி முக்கியஸ்தர்கள், திடிரென்று புலம்பெயர் நாடுகளில் தோன்றி தேசியம் பேசுவது இன்று சாதாரண நிகழ்வாக மாறி வருகின்றது. 'நான் வன்னியில் தலைவருடன் நின்றனான்..

**11ஆம் பக்கம் பார்க்க...**

10ஆம் பக்க தொடர்ச்சி...

'- என்று கூறிக்கொண்டு நிறையப் பேர் ஐரோப்பாவில் தற்பொழுது அரசியல் செய்ய ஆரம்பித்துளார்கள். 'தலைவருடன் நின்ற நீங்கள் எப்படித் தப்பி வந்தீர்கள்?" "ஏன் தலைவரை விட்டுவிட்டு இங்கு வந்தீர்கள்?" இது போன்ற கேள்விகளை நாங்களும் கேட்பதில்லை. அதற்கான பதிலை அவர்களும் சொல்வதில்லை.

இன்றும் குறிப்பாகப் பார்த்தால், இவர்களில் அனேகமானோர் சிறிலங்கா விமான நிலையம் வழியாகவே வந்திருக்கின்றார்கள். இவர்களில் பலர், வவுனியாவில் சிறிலங்கா தடுப்பு முகாமில் மாதக்கணக்காக சிறிலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள். வன்னியில் புலிகளுக்குச் சாப்பாடு கொடுத்தவர்கள், சென்றியில் நின்றவர்கள், எல்லைக் காவல் கடமைகளில் ஈடுபட்டவர்கள் என்று பலரும் இப்பொழுது கூட சிறிலங்கா படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலையில், அனைவரும் அறிந்த விடுதலைப்புலி முக்கியஸ்தர்கள், தலைவருடன் இருந்தவர்களால் எப்படி சிறிலங்கா இராணுவத்தின் வாய்களுக்குள் இருந்து வெளியேற முடிந்தது? எப்படி சிறிலங்கா படையினரின் கண்களில் மண்ணைத் தூ விவிட்டு சிறிலங்காவின் ஒரே சர்வதேச விமான நிலையம் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு வர முடிந்தது? இது பலராலும் சந்தேகத்துடனேயே பார்க்கப்படுகின்றது. இவர்கள் Operation Trust' உளவு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவர்களா என்கின்ற கோணத்திலும் சிந்திக்கவேண்டிய நிலையில்தான் இன்று புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் கடந்த காலங்களில் தமிழ் தேசிய எதிரிகளாக வலம் வந்தவர்களின் செயற்பாடுகளை சற்று ஆழமாக நோக்குகின்ற பொழுது இந்தச் சந்தேகம் மேலும் வலுவடைகின்றது. ஐரோப்பிய நாடுகளில் தமிழ் தேசியவாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற சாதாரணமான ஒரு மே தின ஊர்வலத்திலேயே புகுந்து கலாட்டா பண்ணுகின்ற மாற்றுக் குழுவினர், அல்லது சிறிலங்காவின் கைக்கூலிகள், தற்பொழுது புலம்பெயர் தமிழர்கள் மேற்கொள்ளுகின்ற போராட்டங்கள் தொடர்பில் பெரிய அளவில் அக்கறை காண்பிப்பதை காணமுடிவதில்லை. மகிந்தவிற்கு எதிராக புலம்பெயர் மண்ணில் ஒரு பெரிய வேள்வியே நடைபெற்று வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூட, இப்படிப்பட்டவர்கள் ஒரு புன்சிரிப்புடன் மௌனம் கடைப்பிடித்து வருவதை ஒரு வித்தியாசமான அதேவேளை அவதானிக்கப்படவேண்டிய ஒரு நகர்வாகவே நான் பார்க்கின்றேன்.

இது, சிறிலங்கா இராணுவம் புலம்பெயர் மண்ணில் மேற்கொள்ளுகின்ற Operation Trust' போன்ற ஒரு உறுதியான, நீண்டகால செயற்பாட்டுக்கான வழிவிடுதலாகக் கூட இருக்கலாம்.

புலம்பெயர் தமிழர்கள் சற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

இந்த இடத்தில் ஒரு முக்கிய விடயத்தை தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன்.

வன்னி மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மரணத்தின் பிடியில் இருந்து மயிரிழையில் தப்பித்து, உயிரைக் கையில் பிடித்தபடி மேற்குலகில் தஞ்சமடைந்திருக்கும் பலர் இன்று எம்மத்தியில் இருக்கின்றார்கள். அவர்களின் உண்மையும், தூய்மையும் உண்மையிலேயே மெச்சத்தக்கது. அவர்களது வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் புலம்பெயர் தமிழர்களுக்கு நிச்சயம் தேவை என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனாலும் இவர்கள் மத்தியில் கலந்து சிறிலங்காப் புலனாய்வாளர்களால் அனுப்பப்படும் உளவு ஏஜன்டுக்கள் பற்றிய எச்சரிக்கை உணர்வையும் நாம் கொண்டிருப்பது இச்சந்தர்ப்பத்தில் மிக மிக அவசியம்.

இல்லாவிட்டால், புலம்பெயர் தமிழர்களின் விடுதலை உணர்வை திசைதிருப்பும் ஒருவகை Operation Trust' உளவு நடவடிக்கைக்கு அநியாயமாகப் பலியாகிப்போன மற்றொரு இனம் என்கின்ற பெயர் வரலாற்றில் எமக்கு கிடைத்துவிடும்

05ஆம் பக்க தொடர்ச்சி...

தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவ திலுள்ள எண்ணிக்கையைக் குறைத்தார். ஒரே நுழைவுத்தேர்வு ஆனால் தமிழ் மாணவர்கள் 30வீத மதிப்பெண்களை அதிகம் பெறவேண்டும் என்ற இச்சட்டமே தமிழ் மாணவர் பேரவை ஆரம்பிக்க காரணமாக அமைந்தது. தமிழ் பகுதிகளுக்கும் இம்மாணவப் பேரவைகள் உதயமாகின. பின் நாட்களில் அரசியல் தலைவர்கள் இம்மாணவப்பேரவைகளில் இருந்து வரத்தொடங்கினர்.

சிலோனுக்கு புதிய அரசியற் சட்டம் அமைக்கும் குழுவில் செல்வாவும் அங்கம் வகித்தார். அரசியற் சட்டம் சிங்களவர்களுக்கு சாதகமாக உருவாக்கப்படுவதை அறிந்த அவர் அக்குழுவிலிருந்து விலகினார். மே14 1972ல் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து தமிழர் கூட்டணியை அமைத்து இலங்கை அரசியலுக்குள் சுயமாக நிலம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

மே22 சிறிமாவோ புதிய அரசியற் சட்டத்தினை அறிமுகப்படுத்தினார். சிலோன் சிறிலங்கா என பெயர் மாற்றம்பெற்று பௌத்த சிங்கள தேசம் என அறிவிக்கப்பட்டதுடன் சிங்கள மொழி மட்டுமே அரச மொழியாக அறிவிக்கப்பட்டு, பௌத்தத்திற்குதனிஅந்தஸ்துவழங்கப்பட்டு சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்ட அரசியல் சட்ட பாதுகாப்பினை விளக்கினார். இதனை எதிர்த்த செல்வா உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து அடுத்த தேர்தலில் நிற்கப்போவதாகவும், சுய ஆட்சி கொண்ட தமிழ் மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் மக்கள் முன் வைக்கப்போவதாகவும், மக்கள் அவரை வெற்றிபெறச்செய்தால் சுயாட்சி தான் அவருடைய கோரிக்கை எனக்கொண்டு புதிய அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்றார். 1972-74 வரை நிலச்சீர்திருத்தச்சட்டத்தின் மூலம் தமிழர்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது. இதன் காரணமாக திரு கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பில் சிங்கள மக்களின் தொகை அதிகரித்தது.

1973ல் அடுத்த திருப்புமுனையாக உலகத்தமிழர் ஆராய்ச்சி மாநாட்டிற்காக அரசினை நாடினர். அரசு ஒத்துழைக்க மறுத்தது. இதனை சவாலாக ஏற்று தாங்களே நடத்துவது என முடிவெடுத்தனர். 1974ல் மாநாட்டின் கடைசி நாளில் சிங்களவர்கள் கூட்டத்தினுள்ளே புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

கலவரத்தில் 09பேர் மின்சாரம் தாக்கி இறக்க, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர். தமிழர் தம் தாய்மொழிக்கு எதிராக நடந்த அவமானம் என கருதினர். தமிழர் கூட்டணி அரசின் அடக்குமுறைகளுக்கும், விரைவான தீர்வுகளை எதிர்பாக்கும் அரசியல் சினங்கொண்ட இளைஞர்களுக்கும் நடுவில் நின்று தவித்தது.

இம்மாநாட்டிற்கு காரணமாகவிருந்த சிவகுமாரனும் அவரின் சகாக்களும் சந்திரசேகராவையும் யாழ்ப்பாண மேயர் துரையப்பாவையும் கொலை செய்யத் திட்டமிட்டனர். இரண்டு கொலை முயற்சிகளில் சந்திரசேகரா தப்பிவிட்டார். பொலிசார் சிவகுமாரனை துரத்திவர கரும்புதோட்டத்தினுள்ளே ஓடியவரை துரத்திப்பிடித்த சயனைட் உட்கொண்டார். தேசத்திற்காக செய் அல்லது செத்துமடி என்ற கோட்பாட்டிற்கு முதலில் வித்திட்டார்.

யாழ் மேயரைக் கொல்ல பல தமிழ் இளைஞர்கள் முயற்சித்த போதிலும் ஒரு தமிழ் இளைஞன் சுட்டுக்கொன்றார். அந்த இளைஞனே பின்நாளில் போர்வீரனாக வளர்ந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனாவார். 1975ல் மூன்றாண்டுகள் காத்திருந்த செல்வா நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றிபெற்றார். இவ்வெற்றியை தமிழ்மக்களின் சுயஆட்சிக் கோரிக்கையாக ஏற்க அரசு மறுத்தது. மே 22 1976ல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் முன்னணி, தமிழர் விடுதலை முன்னணி என உருமாறியது.

முதன் முறையாக இலங்கையரசின் கீழ் சுயஆட்சி என்ற கோரிக்கையை கைவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கி சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். நவம்பர் 19ல் பாராளுமன்றத்தில் உருக்கமாக தந்தை செல்வா உரையாற்றினார். தமிழீழம் என்ற கோரிக்கையை கைவிடுகின்றோம். ஒரு நாள் சுதந்திர தமிழீழம் மலரும் என்றார். ஏப்ரல் 29ல் தந்தை செல்வா அவர்கள் மாரடைப்பால் இறந்தார். அடுத்த பொதுத்தேர்தலில் சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கைகைய தமிழர் விடுதலை முன்னணி மக்கள் முன் வைத்தது. சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கை 1972ல் புறந்தள்ளி மக்கள் இப்போது அதனை ஏற்று 82சதவீத வாக்குகளுடன் வெற்றிபெறச்செய்தனர்.

செல்வாவின் மறைவிற்கு பின் மிதவாத அரசியல் மெதுவாக பின்னடைவாக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை முன்னெடுத்துச் சென்றனர். அடக்குமுறைச் சிங்கள இனவாதம் அதை விட அதிகாரமிக்க தமிழினத்தினை வளர்த்துவிட்டது. பாகுபாடுகளை வளர்த்த சிங்கள அரசுகள் சிறுபான்மையினரை விளிம்பிற்குள் தள்ள 1980களில் உள்நாட்டுப் போர் தொடங்க காரணமாகவிருந்தது.

## பொன்மொழிகள் தமிழில்

**1. அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டவனே அறிவாளி ஆகிறான்.**

**2. பிறரிடமிருந்து நல்லனவற்றைக் கற்றுக் கொள்ள மறுப்பவன் இறந்தவனுக்கு இணையானவன்.**
**– சுவாமி விவேகானந்தர்**

**3. எதிர்கால மகிழ்ச்சிக்கு கல்வியே ஆதாரம்.**


**4. பேசிக் கொண்டே இருக்காமல் செயலில் இறங்குவது அதை முடிப்பதற்கான வழி.**

**5. துன்பப் படுபவர்களுக்கு உதவுபவன், இறைவனுக்கு கடன் தருகிறான்.**

**6. நம்பிக்கை நம்மை வாழவைக்கும். அச்சம் நம்மை கொன்றே விடும்.**

**7. நமக்கு கிடைக்காததை நினைத்து சோகத்தோடு இருப்பதை விட, நமக்கு கிடைத்ததை நினைத்து மகிழ்ச்சியோடு இருப்பதுதான் வாழ்க்கையில் நிம்மதியைத் தரும்.**

**8. குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை வரவேற்க கற்றுக்கொள். எந்த அளவு இதைச் செய்கிறாரோ, அந்த அளவுக்கு வேகமாக முன்னேறுவாய்.**




வார்த்தைகளை விட மௌனமே அதிகம் பேசுகிறது சில நேரங்களில்..





# பல்சுவை கதம்பம்



## அவகோடா பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வருவதால் என்ன பலன்கள் !!

அவகோடா பழத்தில் நல்ல கொழுப்புக்கள், மக்னீசியம், பொட்டாசியம், விட்டமின் சி, விட்டமின் கே1, விட்டமின் பி6 மற்றும் கார்போஹைட்ரேட்டுகள் அடங்கியுள்ளன. ஆர்த்தரைட்டீஸ் வந்து கஷ்டப்படுபவர்கள் இந்த பழங்களை தின்றால் அவர்களின் மூட்டுவலி மறைந்துவிடும்.

பழங்களிலேயே அதிக அளவு கலோரி கொண்ட பழம் அவகோடா பழம். கண்களுக்கு பார்வை திறனை அளிக்கும் வைட்டமின் ஏ இதில் தாராளமாக உள்ளது. இதயத்திற்கு செல்லும் இரத்த குழாய்களில் கொழுப்பு அடைக்காமல் பார்த்துக் கொள்ளும்.

அவகோடா பழத்தில் உள்ள வைட்டமின் ஏ நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது. மேலும் உடல் உறுதி பெற உதவுகிறது. வயிற்றில் அதிகமாக புளிப்புத் தன்மையுள்ள பொருட்கள் சேர்ந்து வயிற்று வலி ஏற்பட்டால், பழுத்த பப்பாளி பழத்துடன் அவகோடா பழத்தையும் சேர்த்து சாப்பிட்டால் வயிற்று வலி உடனே குணமாகும். இதே போல் ஐந்து நாட்களுக்கு சாப்பிட வேண்டும். இதனால் வயிற்று வலி பூரணமாக குணமாகும்.

சிறுநீரகத்தில் ஏற்படும் புண், வீக்கம் போன்றவற்றை குணமாக்க பழுத்த பப்பாளி பழத்துடன் அவகோடா பழங்களையும் சேர்த்து சாப்பிட வேண்டும். சொறி சிரங்கு உள்ளவர்கள் அவகோடா பழத்தை தொடர்ந்து சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும். இப்பழத்திலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெயையும் உடம்பில் தேய்த்து வர வேண்டும்.

அவகோடா பழத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவும் வைட்டமின் சி நிறைந்துள்ளது. எனவே பருவகால நோய்களை நம்மை அண்டாமல் இருக்க இதனை அடிக்கடி சாப்பிட்டு வரலாம். தோல் நோயால் அவதிப்படுபவர்கள் அவகோடா பழத்திலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்யை உடம்பு முழுவதும் நன்கு தேய்த்து குளித்து வர வேண்டும். இந்த பழம் குடல்களை சுத்தப்படுத்தி, கழிவுகளை வெளியேற்றிவிடுவதால் வாய் துர்நாற்றம் அகன்று விடும்.



## செம்பருத்தி பூவின் மருத்துவ பயன்பாடுகள் என்ன...?



இதய நோய் அணுகாமல் தடுக்கும் அற்புதமான ஒரு இயற்கை மருந்து செம்பருத்திப்பூ. செம்பருத்தி பூவைப் பசுமையாகவோ, காய வைத்து பொடி செய்தோ வைத்துக் கொண்டு, பாலில் கலந்து காலை, மாலை வேளைகளில் குடித்து வர இதய பலவீனம் நீங்கும்.

செம்பருத்திப்பூக்கள் வெறும் இதயநோய் என்றில்லாமல், இதயநோய் சம்பந்தப்பட்ட படபடப்பு, வலி, ரத்தக்குழாய் அடைப்பு என்று அத்தனை பிரச்சனைகளில் இருந்தும் நிவாரணம் தரக்கூடியது.

செம்பருத்தி பூவின் இதழ்களை சாப்பிடுவதாலும், மாதவிடாய் பிரச்சனைகள், கருப்பை கோளாறுகள் அனைத்தும் நீங்கும். இரும்பு சத்து ரத்தம் விருத்தி ஆவதற்கும், உடலின் பலத்திற்கும் இரும்பு சத்து மிகவும் அவசியமாக இருக்கிறது.

வெறுமனே செம்பருத்திபூவின் இதழ்களை சாப்பிடலாம். சாப்பிட விரும்பாதவர்கள் அப்பூவை நீரில் வேகவைத்து, வடிகட்டி அருந்தலாம்.

செம்பருத்திப்பூவை ஜூஸ் செய்து குடிக்கலாம். 4-5 செம்பருத்திப்பூக்களின் இதழ்களை எடுத்துக்கொண்டு அதனுடன் விதை நீக்கப்பட்ட ஒரு நெல்லிக்காய், இரண்டு ஈர்க்கு கறிவேப்பிலை, தோல் நீக்கிய இஞ்சித்துண்டு சிறிது சேர்த்து மையாக அரைத்து வடிகட்டிக்கொள்ள வேண்டும். இதில் தேன், நாட்டுச் சர்க்கரை சேர்த்து அருந்தலாம்.

## முருங்கைக்காயை சாப்பிடுவதால் இத்தனை அற்புத நன்மைகள் உள்ளதா...?

முருங்கைக்காயில் உள்ள அதிக அளவு கல்சியம், இரும்புச்சத்து மற்றும் விட்டமின்கள் போன்றவை எலும்புகள் வலிமையடைய உதவுகின்றன. மேலும் ஆஸ்துமா, கல்லீரல் மற்றும் கணைய வீக்கம், போன்றவற்றை குணப்படுத்துகிறது.

முருங்கைக்காயில் தாதுஉப்புக்கான கல்சியம், இரும்புச்சத்து, மாங்கனீசு, மெக்னீசியம், பாஸ்பரஸ், செலீனியம், துத்தநாகம், பொட்டாசியம், குறைந்த எரிசக்தி, அதிகளவு நார்சத்து, கார்போஹைட்ரேட், புரதச்சத்து, அமினோ அமிலங்கள் மற்றும் தாது உப்புக்கள் உள்ளன.

முருங்கை காய் உடலுக்கு நல்ல வலுவைக் கொடுக்கும். இதை சாப்பிட்டால் சிறுநீரகம் பலப்படும், தாது உற்பத்தி அதிகரிக்கும். வாரத்தில் குறைந்தது இரண்டு முறை முருங்கைக் காயை உணவாக எடுத்துகொண்டால் ரத்தமும், சிறுநீரும் சுத்தம் அடையும்.

குழந்தைகள் முருங்கைக்காய் விதைகளை சாப்பிட்டால் மலக்குடல்களில் இருக்கும் கிருமி பூச்சிகள் வெளியேறும். மேலும் மலச்சிக்கலால் அவதி படுபவர்கள், மூலநோயால் பாதிக்கப்பட்டவர்கள், சளி பிரச்சனை உள்ளவர்கள், ரத்தசோகை, வயிற்றில் புழு பிரச்சனை உள்ளவர்கள், கணையம், கல்லீரலில் வீக்கம் உள்ளவர்கள் முருங்கைக்காயை சாப்பிட்டால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.

முருங்கைக்காயில் ஜிங்க் சத்து அதிகம் காணப்படுகிறது. முருங்கைக்காயை தொடர்ந்து சாப்பிடும் ஆண்களுக்கு பாலுணர்ச்சி தூண்டப்படுவதோடு, விறைப்புத்தன்மை, விரைவில் விந்து வெளியேறுதல், மலட்டுத்தன்மை குறைபாடு போன்ற பிரச்சனைகள் நிவர்த்தியாகின்றன.

முருங்கைக்காயானது தொண்டை கரகரப்பு, சளி மற்றும் தொண்டை புண் ஆகியவற்றை சரிசெய்வதில் வல்லது. முருங்கைக்காய் தோல் புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய் மற்றும் புரோஸ்டேட் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும் வல்லமை கொண்டது.

## சருமத்தில் எண்ணெய் பசை இருந்தால் முகப்பரு வருமா...?

முகப்பரு விஷயத்தில் சரியான நேரத்தில் தகுந்த சிகிச்சை எடுக்காவிடில் முகத்தில் கரும்புள்ளிகள், ஆழமாக தழும்புகள் ஏற்பட்டு விகாரமான தோற்றத்தை ஏற்படுத்தும்.

எண்ணெய் பசையுள்ள சருமம் உடையவர்களுக்கு அதிகம் பருக்கள் உண்டாக வாய்ப்பிருக்கிறது. அதனால் சருமத்தில் எண்ணெய் பசை ஏற்படுவதை தவிர்ப்பது அவசியம்.

பருவானது பருத்து பழுத்து விட்டால் பச்சரிசி மாவுடன் சிறிது மஞ்சளை அரைத்து அதைச் சூடாகக் கிளறி, கட்டியின் மேல் வைத்து, பிறகு காலையில் சோப்பு போட்டு சற்று சூடான நீரால் முகத்தை நன்றாகக் கழுவ வேண்டும். அதே போல பயத்தம் பருப்பு போட்டுக் குளித்தால் எந்தத் தோல் சம்பந்தமான எந்த வியாதியும் நம்மை நெருங்காது.

ஆயுர்வேத சோப்புகள் போட்டுக் குளித்தாலும் பரு உண்டாவதை தடுக்கலாம். அதுபோல செயற்கையான க்ரீம், பவுடர் இவற்றுக்குப் பதிலாக, பாலேடு முகத்தில் தடவிக் கொண்டு, பிறகு கழுவினால் முகம் பளபளப்பாக மெருகேறி இருக்கும்.

தேனுடன் சிறிது லவங்கப்பட்டை தூளைச் சேர்த்து முகத்தில் தடவலாம். கடுகை சிறிது தேனுடன் கலந்து முகத்தில் தடவலாம். அவ்வாறு தடவினால் முகப் பரு பிரச்சனை நம்மை அண்டாது.

மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை முகத்தை குளிர்ந்த நீரால் கழுவுங்கள். ஆனால் சோப்பு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தினமும் குளிக்கும்போது முகத்தில் சோப்புக்குப் பதில் பாசிப்பயறு மாவைத் தேய்த்துக் குளித்துவர முகம் பொலிவு பெறும். கரும் புள்ளிகள் மறையும்.

தக்காளி சாற்றினை முகத்தில் தடவிவர முகப்பரு நீங்கும். காய்ச்சாத பாலை முகத்தில் தடவிவர, முகப்பரு நீங்கும்.

# ஒரு உண்மை காதல் கதை

என்னதான் சொல்லுங்க பள்ளி வாழ்கையும், கல்லூரி வாழ்கையும் என்றுமே இனிப்பான நினைவுகள்.

அப்படிப்பட்ட ஒரு பள்ளி வாழ்கையின் காலை ஒளிருகிறது.

"அம்மா நான் கிளம்பறேன்"

அம்மா - பாத்து போயிட்டு வா

. "சரிம்மா"

ஐயோ அவள் கிளம்பி போய் பத்து நிமிஷம் ஆச்சி. மிதி வண்டியை வேகமாக மிதித்து கொண்டு கிளம்பினேன். இரண்டு தெரு முடித்து மெயின் ரோடை தொடும் வரை என்னமோ பந்தய ஓட்டம் போல மிதித்தேன்.

ஸ்ஸ்ஸ்

மெயின் ரோடு வந்தாச்சி அவளை காணலியே எங்கே ?

திரும்பினால் அவள் நண்பிகளுடன் என்னை கடந்து செல்கிறாள்.

அவள் கடந்து போகும் போது ஒரு கடை பார்வை என்னை பார்ப்பாள். அந்த ஒரு பார்வைக்காக காலையிலும் மாலையிலும் நான் நிற்பது தொடர்ந்தது.

அந்த பத்தாம் வகுப்பிலேயே படிப்பை தவிர மற்ற விஷயங்களே எளிதாக என்னுள் சென்று கொண்டு இருந்தன. இதற்கும் பக்கத்துக்கு வீட்டில் இருக்கும் அவளிடம் இது வரை பேச முடியவில்லை.

என்ன செய்யலாம்
ம்ம்...

நான் இங்கு என் குடும்பத்தோடு குடிவந்து ஒரு வருடம் ஆகிறது. எப்படியாவது அவளிடம் பேசிவிட வேண்டும் ஆனால் என்ன வென்று ஆரம்பிப்பது. இவன் தேறவே மாட்டான்னு நினைசிடுவாளோ இல்ல இவன் கிட்ட பேசி என்ன ஆவப்போது. ஒன்னும் பெரிய வசதி இல்ல ஸ்கூலுக்கு போறது ஒரு பழைய சைகிள்ல. இப்படிதாவது..
நினைப்பாளோ.....

அவளோ நல்ல வசதியான குடும்பம். அவ வர சைக்கிளே அவளுடைய வசதிய சொல்லும.

மவனே இன்னிக்கி நீ அவ கிட்ட பேசறே நான் பாக்கறேன் - என் நண்பன் ஒரு முடிவோட இருந்தான்.

டேய் சந்துரு சாயந்தரம பேசலாம்டா இப்போ ஸ்கூலுக்கு நேரம் ஆச்சி.

போடா போ கிட்டதட்ட ரெண்டு வருஷ மா இததான் நீயும் சொல்ற நானும் கேக்குறேன். மவனே இதுக்காக தான் அப்போவே சொன்னேன் அவ வீட்டுக்கு கிட்ட குடி போகாத அவ கிட்ட உன்னால பேச முடியாதுன்னு சொன்னேன்.

நான் -- இல்லடா ஆறாம் வகுப்புலர்ந்து பாக்குறோம் ஆனா பேசினது தான் இல்ல.

நீ பாத்தியா அவ என்னைய ஒரு சிரிப்போட பாக்கறா.

அடேய் அவ உன்ன மாதிரி லூச பாத்திருக்க மாட்டா போல.

ஒரு நாள் மாலை பொழுது

மஞ்சு ஒரு நிமிஷம் இது என் நண்பன்.

சொல்லு என்ன? - அவள்

ஒன்னும் இல்ல இவன் உன்கிட்ட கொஞ்சம் பேசனுமாம் - நண்பன்

ஏன் அவனுக்கு பேச வராதா நீ என்ன அவனுக்கு ??

டேய் பேசி தொலைடா

அது வந்து......... எப்டி இருக்கே - இது நான்

பாத்தா எப்படி தெரியுது - இது அவள்

எனக்கு காத்துதான் வந்தது. அது வந்து ........

அவள் போய் ஒரு நிமிஷம் ஆச்சி.
என்னால் பேச முடியல.
என்னடா இது தூரத்துல பாக்கும்போது நல்லா தாண்டா இருக்கா.
பேசினா பொறுமையே இல்லையே எப்படி பேசறது.

டேய் இது ஆவறது இல்ல பேசாம வா போலாம் - நண்பன்.

கல்லூரி அடிஎடுத்து வைத்த காலம்.

நான் அவளுக்காக பஸ் ஸ்டாண்டில் நின்றிருக்கும் போது................

டேய் நீ இன்னும் திருந்தவே இல்லையா - நண்பன்

இல்லடா எனக்கு அவ கிட்ட பேசறத விட.





பேசினதுக்கப்புறம் அவ எனக்கு உன்ன பிடிக்கலய்னு சொல்லிட்டனா என்ன பண்றது. என்னை என்போக்கில விட்டுடு.

இரண்டாவது வருட படிப்பில் ஒரு நாள் அவள் - மழையில்

பஸ் ஸ்டாண்டில்----

நான் அவளிடம் என்னாங்க எப்டி இருக்கீங்க - பாத்து ரொம்ப நாள் ஆச்சி.

அவள் - என் பிரண்டுக்காக வைட் பண்றேன்.

ஒரு பைக் வந்து நின்றது அவள் அதில் தொற்றிகொண்டால்.

ஒரு நிமிஷம் என் இதயம் நின்றே விட்டது.

மறுபடியும் என் நண்பன் சொன்னான் - நான் தான் அன்னிக்கே சொன்னேன் நீ தான் கேக்கல. இது ஆவறது இல்லன்னு சொன்னேன்.

பின்பு ஒரு நாள் அவளை அதே பஸ் ஸ்டாண்டில் சந்தித்தேன் அப்போது என் படிப்பு முடிந்திருந்தது. அவள் எங்கோ சென்று கொண்டு இருந்தாள்.

ஒரு சிறிய புன்னகை அவளிடம் இருந்து வந்தது. அவள் என்னருகே வந்து பேசினாள் என்ன எப்படி இருக்கீங்க?

நான் நல்லா இருக்கேன் நீங்க - அவள் ஒருவித சலிப்புடன் இருக்கேன் என்றாள்.

என்ன ஆச்சி மஞ்சு ஒரு மாதிரியா இருக்கீங்க.

ஒன்னும் இல்ல ...........

சொல்லுங்க நான் ஒன்னும் தப்பா நினைச்சிக்க மாட்டேன். அவள் ஒன்றும் சொல்லாமல் சென்று விட்டாள்.

கொஞ்ச நாள் கழித்து நானும் என் நண்பன் சந்துருவும் ஒரு ஹோட்டலில் உணவருந்திகொண்டு இருந்தோம். அப்போது மஞ்சுவின் அம்மா அங்கு காபி குடித்து கொண்டு இருந்தார் என்னை பாத்தவுடன் என்னப்பா எப்டி இருக்கே என்றார்.

நானும் நல்லா இருக்கேன்மா என்றேன். என்ன தம்பி எங்கே வேலை செய்றீங்க?

நான் ஒரு கம்பனில சேல்ஸ் லைன்ல இருக்கேம்மா. நீங்க எப்படி இருக்கீங்க என்றேன். அவர் ஓ என்று அழுது விட்டார் எனக்கு ஒன்னும் புரியல என்ன ஆச்சிம்மா.

உனக்கு தெரியாதா தம்பி?

சொல்லுங்க என்றேன்.

அவர் சொன்னது - மஞ்சுவுக்கு நன்றாக மனம் முடித்து கொடுத்து இருக்கிறார்கள். திருமண ஆன பத்தே நாட்களில் பைக் விபத்தில் அவளுடைய கணவர் இறந்து விட்டாராம் .

கொஞ்ச நாட்களிலேயே அவளின் அப்பாவும் இறந்து விட்டாராம்.

அவர் இறந்த பிறகு அவருடைய வியாபார நண்பர்கள் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்திற்காக வீட்டையும் விற்று எடுத்து கொண்டார்களாம்.

இப்போது மஞ்சு வேலை செய்து அவளும் அவள் அம்மாவும் வாழ்கையை ஓட்டுவதாக கூறினார்.

நான் அவளிடம் சென்று பேசினேன்.

நீ என்னை தவறாக எடுத்து கொள்ளாதே என்றேன். நான் இன்றும் உன்னையே விரும்புகிறேன் உனக்கு என்னை பிடித்திருந்தால் சொல் நாம் திருமணம் செய்து கொள்வோம் என்றேன்.

சொல்லு நான் ஒன்னும் தப்பா நினைச்சிக்க மாட்டேன். அவள் ஒன்றும் சொல்லாமல் சென்று விட்டாள்.

(அவள் மனதுக்குள் சொல்லியது நான் உன்னை விரும்பிய காலத்தில் நீ என்னிடம் சொல்ல வந்ததை இன்றுதான் சொல்கிறாய். ஆனால் நான் பதில் தரும் நிலையில் இல்லையே என் அன்பே)

அவள் மறுத்தாள் அவளை சம்மதிக்க வைக்க ஆறு மாதம் ஆகியது.

நான் பேச நினைத்தபோது பேச இயலவில்லை. வெகு நாள் கழித்து பேசிய பேச்சு என் வாழ்கையின் ஆரம்ப புள்ளியானது.

இன்று அவளும் நானும் எங்கள் குழந்தையுடன் சந்தோசமாக உள்ளோம்.

என் அப்பா சம்மதிக்கவில்லை என்றாலும் என் அம்மா அன்று ஒரு வார்த்தை சொன்னார்.

உன் விருப்பம் போல செய் வாழ்க்கை உனக்கு சந்தோசமாக அமையட்டும் என்றார்.

ஒரே வீட்டில் இருந்தாலும். இன்று வரை அப்பா பேசவில்லை என்றாலும் என் அம்மாவின் அன்பான ஆசியுடன் என்வாழ்கை இனிதே செல்கிறது.

# விளையாட்டு செய்திகள்

## கடைசித் தொடரில் களமிறங்கிய செரீனா வில்லியம்ஸ்

அமெரிக்க நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தற்போது நடந்துவரும் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியுடன் ஓய்வுபெற முடிவு செய்துள்ளார்.

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் டென்னிஸ் விளையாட்டு உலகில் ஆதிக்கம் செலுத்தி வரும் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். 6 முறை அமெரிக்க ஓபன் சாம்பியனான அமெரிக்க நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (40 வயது), இந்த தொடருடன் டென்னிசில் இருந்து விடைபெற முடிவு செய்துள்ளார்.

செரீனா வில்லியம்ஸ் தனது கடைசி தொடரில் விளையாட இருப்பதால் அவரது போட்டியை காண இரசிகர் கூட்டம் நிரம்பி வழிந்தது. செரீனா வில்லியம்ஸின் கணவர் அலெக்சிஸ் ஓஹானியன், மகள் ஒலிம்பியா, தாயார் ஆரசின் பிரைஸ், பில் கிளிண்டன் உள்ளிட்ட முன்னாள் தலைவர்கள், முன்னாள் டென்னிஸ் பிரபலங்கள் உள்ளிட்டோர் ஆர்தர் ஆஷ் ஸ்டேடியத்திற்கு வருகை தந்திருந்தனர். கடந்த 1999ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றபோது செரீனா வில்லியம்ஸ் தனது கூந்தலில் வெள்ளை மாலை ஒன்றை அணிந்திருந்தார். அதனை நினைவூட்டும் விதமாக செரீனா வில்லியம்ஸின் மகள் ஒலிம்பியா தனது கூந்தலில் வெள்ளை மாலை அணிவித்து தனது தாய்க்கு மரியாதை செய்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் டன்கா கோவினிச்சை (மான்ட்னெக்ரோ) வீழ்த்தி செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்றார். நடைபெற இருக்கும் இரண்டாவது சுற்றில் இரண்டாம் நிலை வீராங்கனையான அனெட் கொன்டவீட்டை சந்திக்கிறார் செரீனா வில்லியம்ஸ். ஒற்றையர் பிரிவில் 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று மகத்தான சாதனை படைத்துள்ள செரீனா, இந்த தொடரின் இரட்டையர் பிரிவில் சகோதரி வீனஸ் வில்லியம்சுடன் இணைந்து களமிறங்க "வைல்டு கார்டு"சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## இலங்கை அணி அபார வெற்றி!

ஆசிய கிண்ண ரி20 தொடரின் அன்று(01.09) இடம்பெற்ற 5 ஆவது போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இலங்கை அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றிப் பெற்றுள்ளது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் ஹபிப் ஹொசைன் அதிகபட்சமாக 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

மெஹிதி ஹசன் 38 ஓட்டங்களையும், மொஹமதுல்லாஹ் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை பெற்றுக் கொண்டனர்.

இதற்கமைய, பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை 19.2 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய குசல் மெந்திஸ் 60 ஓட்டங்களையும் அணித்தலைவர் தசுன் சானக 45 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் எபடோட் ஹொசைன் 3 விக்கெட்டுக்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார்.

இந்த வெற்றியை தொடர்ந்து இலங்கை அணி சூப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

மேலும், விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியை தழுவிய பங்களாதேஷ் அணி தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட கிரிக்கெட் பிரபலம்!

பிரபல வீரர் கிராண்ட்ஹோம் ஓய்வு அறிவிப்பை வெளியிட்டதை அடுத்து நியூசிலாந்து கிரிக்கெட் வீரர்களுக்கு டி20 லீக் போட்டிகளில் விளையாடுவதில் தான் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளதா என்கிற கேள்வி எழுந்துள்ளது. நியூசிலாந்து அணியின் ஆல்ரவுண்டர் காலின் டி கிராண்ட்ஹோம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். சமீபத்தில் பிபிஎல் போட்டிக்காக அடிலெய்ட் ஸ்டிரைக்கர்ஸ் அணிக்கு கிராண்ட்ஹோம் தேர்வானார். அப்போது, தங்களிடம் இதுகுறித்து அனுமதி எதுவும் பெறவில்லை என நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம் தரப்பு தெரிவித்தது. இந்நிலையில் தற்போது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார் கிராண்ட்ஹோம்.

கிரிக்கெட் உலகம் மாறிக்கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னொரு உதாரணமாக நியூசிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் ஒப்பந்தத்திலிருந்து பிரபல வீரர் டிரெண்ட் போல்ட் விலகினார். 33 வயது டிரெண்ட் போல்ட், நியூசிலாந்து அணிக்காக 78 டெஸ்டுகள், 93 ஒருநாள், 44 டி20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். பணிச்சுமை, குடும்பத்தினருடன் கூடுதல் நேரம் செலவழிக்க வேண்டும் போன்ற காரணங்களால் தன்னை நியூசிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலக்கிக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார் போல்ட். இதனை நியூசிலாந்து கிரிக்கெட் வாரியமும் ஏற்றுக்கொண்டு அவரை விடுவித்தது. இந்த முடிவால் டி20 லீக் போட்டிகளில் டிரெண்ட் போல்டின் பங்களிப்பு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் டி20 லீக் போட்டிகளில் விளையாடுவதில் தான் நியூசிலாந்து வீரர்கள் அதிகமாக விருப்பப்படுகிறார்களா. அதற்கான அறிகுறிதான் கிராண்ட்ஹோமின் ஓய்வு அறிவிப்பா என்கிற கேள்விகள் எழுந்துள்ளன. இதுபற்றி நியூசிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் பொது மேலாளர் பிரையன் ஸ்டிரோனாச் கூறியதாவது:

அனைத்து வீரர்களும் மொத்தமாக ஒரே நேரத்தில் டி20 லீக் பக்கம் சென்று விடுவார்கள் என நான் நினைக்கவில்லை. எங்களுடைய அணியில் நிலவும் சூழலின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. ஐபிஎல் போன்ற டி20 லீக் போட்டிகளில் நியூசிலாந்து வீரர்கள் விளையாடினாலும் நாட்டுக்காகவும் அவர்கள் விளையாடுவார்கள். எனினும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அணுகுமுறை கொண்டிருப்பார்கள் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். சம்பளம் தொடர்பாக எங்களால் போட்டி போட முடியாது. அது எங்களுடைய சாதகமான அம்சம் கிடையாது. அதனால் தான் எங்களுடைய வீரர்களை ஐபிஎல் மற்றும் இதர டி20 லீக் போட்டிகளில் விளையாட அனுமதிக்கிறோம் என்றார்.



# உலக பார்வை



## சீனாவில் கொவிட் வழிகாட்டுதல்கள் கடுமையாக்கப்படுகின்றன

சுமார் 16 மில்லியன் மக்கள்தொகை கொண்ட சீனாவில் உள்ள செங்டு (Chengdu) நகரை முடக்குவதற்கு நகர அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புதிய தனிமைப்படுத்தலின் மூலம், செங்டுவில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க ஒரு நபர் மட்டுமே வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படுகிறார்.

அத்தகைய அனுமதியைப் பெறும் நபர் 24 மணி நேரத்துக்கு முன்னர் நடத்தப்பட்ட PCR பரிசோதனையின் மூலம் தனக்கு கொவிட் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்துவது கட்டாயமாகும் என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

செங்டுவில் இருந்து 157 கொவிட் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளதாகவும், அவர்களில் 51 பேர் எந்த அறிகுறிகளையும் காட்டவில்லை என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொடர்பான கடுமையான வழிகாட்டுதல்களை சீனா பின்பற்றி வருகிறது.



## ஆங் சான் சூகிக்கு மேலும் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை!



மியன்மார் நாட்டின் முன்னாள் தலைவர் ஆங் சான் சூகி, தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அவருக்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னாள் தலைவருக்கு ஏற்கனவே 17 வருடங்களுக்கும் அதிகமாக அந்நாட்டு நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க மக்களின் ஆயுட்கால வீதத்தில் வீழ்ச்சி!

அமெரிக்க மக்களின் ஆயுட்காலம் கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. 1996ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆயுட்கால வீதம் சரிவடைந்துள்ளது



கொவிட் 19 தொற்றினால் இந்த நிலை தோன்றியுள்ளதாக அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் 79 ஆக இருந்த ஆயுட்காலம் தற்போது 76.1 ஆக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூர்வீக குடிமக்கள் மற்றும் அலெஸ்காவில் வாழும் மக்களின் ஆயுட்காலமும் இரண்டு வருடங்களால் குறைவடைந்துள்ளது. தற்காலிக தரவுகளின் படி 2019 மற்றும் 2021 ஆண்டுகளில் மக்களின் ஆயுள் 2.7 வருடங்கள் குறைவடைந்துள்ளது.

## 50 வயதில் கார்ட்டூன் உடைகளை மட்டுமே அணியும் விசித்திர பெண்

குழந்தைகள் அணியும் உடைப்போல், அணியும் 50 வயது பெண் ஒருவர் இணையத்தில் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

என்ன தான் பெரியவர்களாக இருந்தாலும், குழந்தை தனமான செய்கைகள் ஒவ்வொருவரிடமும் இருக்கும். அதற்கு காரணம் மற்றவர்கள் நம்மை பற்றி என்ன நினைப்பார்கள் என தெரியாது.

அந்த வகையில், 50 வயது பெண் ஒருவர் தான் இணையத்தில் பலரது கவனத்தையும் பெற்றுள்ளார். இவர் தன் வாழ்வை கேர் ப்ரீ ஆக வாழ்ந்து வருகிறார்.

சீனாவின் ஷாங்காய் நகரை சேர்ந்த 50 வயதுடைய இந்த பெண் நாம் சிறுவயதில் பார்த்த டிஸ்னி கார்ட்டூன்களில் வரும் கதாபாத்திரங்களை போல தான் உடையணிகிறார்.

ஆசைக்கா ஒரு நாள் அணிகிறார் என்று பார்த்தால், தினமுமே டிஸ்னி பிரின்செஸ் போல தான் உடையணிகிறார். எப்போது, எங்கு சென்றாலும், இவர் டிஸ்னி உடையில் தான் செல்கிறார்.

இவருடைய, தினசரி outfit, ஒரு கவுன், தலையில் கிரீடம் போல அணியும் டியாரா எனப்படும் அணிகலன், கழுத்தில் அந்த கவுனுக்கு ஏற்றவாறு ஒரு நெக்லஸ், கையில் ஒரு ஹேண்ட் பேக்.

யார் இவரைப்பற்றி என்ன சொன்னாலும் கவலைப்படுவதில்லை. இந்த பெண்மணிக்கு உள்ளூர்வாசிகள் கொடுத்துள்ள பெயர், Little Princess of Anfu Road.

## பாகிஸ்தான் வெள்ளத்தில் சிக்கி 6 லட்சம் கர்ப்பிணிகள் சிகிச்சை இன்றி தவிப்பு

பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 6.5 லட்சம் கர்ப்பிணி பெண்கள் மகப்பேறு சிகிச்சை கிடைக்காமல் தவிப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது. பாகிஸ்தானில் கடந்த ஜூன் மாதம் முதல் பெய்து வரும் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.



இதுவரை 375.4 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 1,100க்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். பல கோடி வீடுகளை இழந்து வேறு பாதுகாப்பான இடங்களிலும், நிவாரண முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 7.35 லட்சம் கால்நடைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஐநா.வின் மக்கள்தொகை நிதியம் வெளியிட்ட அறிக்கையில், 'பாகிஸ்தான் வெள்ளத்தில் சிக்கி 6.5 லட்சம் கர்ப்பிணி பெண்கள் மகப்பேறு சிகிச்சைக்காக தவித்து வருகின்றனர்.

இவர்களில் நிறைமாத கர்ப்பிணியான 73,000 பேருக்கு அடுத்த மாதம் பிரசவம் நடைபெற உள்ளது. ஆனால், இவர்களுக்கு பிரசவம் பார்ப்பதற்கு அனுபவமிக்க மருத்துவர்கள், உதவியாளர்கள் போதிய அளவில் இல்லை.' என்று கூறப்பட்டுள்ளது.

## இந்தியாவில் புற்றுநோய்க்கு முதல் தடுப்பூசி அறிமுகம்!

பெண்களை பாதிக்கும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்காக இந்தியாவில் முதல்முறை உருவாக்கப்பட்டுள்ள தடுப்பூசி அறிமுகப்படுத்தப்படுகிறது.

மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் துறையும், சீரம் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியா ஆகிய நிறுவனமும் இணைந்து இந்தத் தடுப்பூசியை அறிமுகம் செய்கிறது.

இது தொடர்பாக பேசிய நீதி ஆயோக்கின் தலைவர் மருத்துவர் என்.கே.அரோரா, கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்காக இந்தியாவிலேயே தடுப்பூசி உருவாக்கப்பட்டது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. இதனை அறிமுகம் செய்வது மகிழ்ச்சியான அனுபவம். இந்த தடுப்பூசியை அறிமுகம் செய்வதன் மூலம் நமது மகள்களும், பெண்களும் மகிழ்ச்சி அடைவார்கள். நீண்ட நாள்களாக காத்திருந்த தடுப்பூசி அவர்களுக்கு கிடைக்கவுள்ளது.

இதுவரை அறிமுகம் செய்யப்பட்ட தடுப்பூசி தேவைகளிலேயே இது மிகப்பெரியது. 85 முதல் 90 சதவிகிதம் பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இது குறிப்பிட்ட நுண்கிருமியால் ஏற்படுகிறது. இந்த தடுப்பூசி கொண்டு அந்த நுண் கிருமிதொற்று ஏற்படாமல் தடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

சர்வதேச குத்துசண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற வவுனியாவை சேர்ந்த வவுனியா இந்துக்கல்லூரியின் பழைய மாணவியான கந்தசாமி டிலக்சினி அவர்களை பாடசாலை சமூகத்தினர் கௌரவிக்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வவுனியா மண்ணிக்கு பெருமை சேர்த்த வீராங்கனையை கௌரவித்தபோது.








# உலக தேங்காய் தினம்

தாயைப் போல தாராள குணம் கொண்டது தென்னை. அடி முதல் நுனி வரை அத்தனை உறுப்பும் மனிதனுக்கு தேவைப்படுகிறது. இந்தத் தென்னை குறித்த விழிப்புணர்வுக்காக செப்டெம்பர். 2ஆம் திகதி 'உலக தேங்காய் தினம்' கடைபிடிக்கப்படுகிறது.

ஆசியா முழுவதும் தென்னை பரவலாக இருந்தாலும், இலங்கை, இந்தியாவில் குறிப்பாக தமிழகம், கர்நாடகம் மற்றும் கேரளாவில் அதிகம் சாகுபடியாகி றது. பாதாம், முந்திரி, பிஸ்தாவுக்கு இணையான ஊட்டச்சத்து தேங்காயில் உள்ளது. ஐந்து ஆண்டுகளில் மகசூல் தரக்கூடியது.

அறுபது ஆண்டுகள் வாழும். தேங்காய் விளைச்சலில் உலகில் பிலிப்பைன்ஸ்க்கு தென்னை மரத்தின் அனைத்து பாகமும் பயன்படுகிறது. இலட்சக்கணக்கானோருக்கு வாழ்வாதாரமாகவும் உள்ளது. இது உணவு, எண்ணெய், மருத்துவம், அழகு சாதனப் பொருள் என பலவிதங்களில் பயனளிக்கிறது.



## இஞ்சியின் 8 நன்மைகள்

- நீரிழிவை கட்டுப்படுத்த உதவும்.
- மூளையின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும்.
- செரிமானத்தை சீராக்கும்.
- குமட்டலை குறைக்கும்.
- வீக்கத்தை ஆற்றும்.
- மூக்கடைப்பை அகற்றும்.
- பக்டீரியா மற்றும் பூஞ்சு தொற்றைத் தடுக்கும்.
- கொலஸ்ட்ராலின் அளவை ஒழுங்குப்படுத்தும்.



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 04.04.2022 அன்று வெளியிடப்பட்டது.